

# தமிழரசு

16.9.1996 ரூ.3




சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்
கோயம்பேடு மொத்த விற்பனை
அங்காடி வளாகம் திறப்பு விழா
டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி
முரசொலி மாறன்
என்.வி.என்.சோமு
கே.பிச்சாண்டி
திரு.சைதை கா.கிட்டு
திரு.ஜே.எம்.ஆரூண் ரஷீத்





# இந்த இதழில்.......


ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில்
மாநிலங்களுக்குப் பங்கு
– முதல்வர் கலைஞர் 2

மந்திரக் கவிஞர் 5

அண்ணாவின் ஆதரவும்,
பெரியாரின் பரிவும் 6

கலைவாணர் விழாவில் 10

சுவைமிகு சொல்லாடல் 12

சொன்னால் நம்பமாட்டீர்கள் 14

கோயம்பேடு மொத்த விற்பனை
அங்காடி வளாகம் 16

காலத்தின் காதுகளில் 19

எங்கள் ஊர் பிரச்சினை 20

அறிவியல் துளிகள் 21

செய்திச் சரம் 22


புரியவில்லை - சிறுகதை 26

தோல் நோய்கள் 35

வேலைவாய்ப்புகள் 40

வாசகர் இதயம் 47

ஆசிரியர் மடல் 48




# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
புரட்டாசித் திங்கள்: 1
மலர் :27 இதழ் : 6
16.9.1996
விலை ரூ. 3.




# ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்குப் பங்கு

**– முதல்வர் கலைஞர்**

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் 'ஜீவன் சுரக்ஷா' என்ற புதிய ஓய்வூதியத் திட்டத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகவுடா அவர்கள் சென்னையில் 24.8.1996 அன்று தொடங்கிவைத்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம், தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார், மத்திய அமைச்சர்கள் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், திரு தனுஷ்கோடி ஆதித்தன், திரு. என்.வி.என். சோமு, திரு. டி.ஆர். பாலு, மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அகில இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிறுவனத்தலைவர் ந.மோ. கோவர்தன் வரவேற்புரையாற்றிட, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், திரு. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமது தொடக்கவுரையில் குறிப்பிட்டதாவது: ''ஜீவன் சுரக்ஷாதிட்டத்தை அறிமுகம் செய்ததன் மூலம் எல்.ஐ.சி. போதுமான அளவுக்கு ஓய்வூதிய நிதியைப் பெற்றிருக்கும் என்று நம்புகிறேன். முதல் கட்டத்திலேயே அது 200 கோடியை எட்டும் என்று எல்.ஐ.சி. நம்புகிறது.

இத்திட்டத்தின் மூலம் எல்.ஐ.சி. தனிப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் மூலம் பாதுகாப்பு அளிப்பதுடன் மிக முக்கியத் தேவைகளான நெடுஞ்சாலைத்துறை, தொலைத் தொடர்புத்துறை போன்றவற்றில் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் நீண்டகால நிதி உதவி அளிக்கிறது.

இந்த நேரத்தில் மாநிலத் திட்டங்களுக்கும் பாரபட்சமின்றி எல்.ஐ.சி. உதவி அளிக்கும் என்று முதல்வர்

கருணாநிதி அவர்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன். அதற்கான ஏற்பாடுகளை நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் செய்வார்.

ஐக்கிய முன்னணி அரசு அமைய இத் தமிழ்நாட்டைச் சேர்ந்த முதல்வர் கலைஞர் கருணாநிதியும், மூப்பனாரும், பெரும் பங்கு ஏற்றனர். அவர்கள் இருவரும் டெல்லியில் - மத்திய ஆட்சிக்கு வலுவான இரண்டு தூண்கள் என்றால் மிகையாகாது.

எனவே மூத்த தலைவர் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கும், மூப்பனார் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது; கைவிடுவது என்ற பிரச்சினைக்கே இடமில்லை! எந்தப் பிரச்சினையிலும் எந்த மாநிலத்தின் நலனுக்கும் பாதிப்பு ஏற்படாமல் நாம் இணைந்தே செயல்படுவோம்.''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய தலைமை உரையிலிருந்து:


''ஆயுள் காப்பீட்டுக் கழகம் நாட்டுப் பணியில் நாற்பது ஆண்டுகள் ஈடுபட்டு ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டுகின்ற வகையிலும், மத்திய நிதி அமைச்சர் திரு. சிதம்பரம் அறிவித்த ஆயுள் பாதுகாப்பு உறுதித்திட்டம் - 'ஜீவன் சுரக்ஷா' என்பதற்குத் தமிழ் மொழி பெயர்ப்பு 'ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம்,' அதனை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வகையிலும் இந்த விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விழாவிற்கு வருகைதந்துள்ள - பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாகத் தமிழகத்திற்கு வருகை தந்துள்ள - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரத்திற்கு வருகை தந்துள்ள அன்புக்குரிய பிரதமர் தேவகவுடா அவர்களைத் தமிழக மக்களின் சார்பாக வருக வருக என்று வரவேற்கின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமையேற்க என்னைப் பணித்த மத்திய நிதி அமைச்சர், அன்புச் சகோதரர் சிதம்பரம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கை ஆக்கு கிறேன்.

சென்னைக்கு உள்ள தனிச்சிறப்புகளிலே ஒன்று, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பதினான்கு மாடிக் கட்டடம். மாநிலத்தில் மின்வசதி, குடிநீர் வழங்கல், வீட்டு வசதி உட்பட சமூக, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறைகளின் மேம்பாட்டிற்காகக் குறைந்த வட்டியில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் உதவி செய்து வருகின்ற காட்சி களை இங்கே வீடியோவில் கண்டீர்கள்.

ஆனால், அன்மைக் காலத்தில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் தமிழ்நாட்டில் கூட்டு நிறுவனத்துறைக்கு அனுமதி வழங்கி வந்துள்ள தொகையின் அளவு குறைந்துவிட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதாவது 1989-90ல் அனுமதிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை நாற்பத்தி ஆறு கோடி ரூபாய். 1990-91ல் அனுமதிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை ஐம்பத்து ஆறு கோடி ரூபாய்.



ஆனால் 1994-95ல் அனுமதிக்கப்பட்ட உதவித் தொகை வெறும் ஐந்து கோடி ரூபாய். இப்படி அனுமதிக்கப்பட்ட உதவித் தொகையில்- உண்மையில் வழங்கப்பட்ட மொத்தத் தொகையின் கணக்கைப் பார்த்தால் கூட, 1989-90ல் நாற்பது கோடி ரூபாய், 1990-91ல் நாற்பத்து ஆறு கோடி ரூபாய். ஆனால் 1993-94ல் பத்தொன்பது கோடி ரூபாய். 1994-95ல் இருபத்து நான்கு கோடி ரூபாய்.

சதவிகிதக் கணக்கில் பார்த்தால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் அனுமதித்த மொத்த உதவித் தொகையில் தமிழ் நாட்டின் பங்கு 1989-90ல் 7.96 சதவிகிதம் 1994-95ல் இது 0.36 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்து விட்டது. இப்படி குறைந்ததற்கான காரணத்தை நான் கூற விரும்ப வில்லை. உங்களுக்கே தெரியும். தெரிந்ததைத் திரும்பத் திரும்ப

சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் தெரிவிக்கவில்லை.

நடப்பு ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள கூட்டு நிறுவனத்துறைகளுக்கு ஆயுள்காப்பீட்டு நிறுவனத்தினுடைய உதவித் தொகை, அதன் அளவு உயரும் என்று நான் நம்புகின்றேன். உயரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உதவிட வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சரை உங்கள் சார்பாக வேண்டுகின்றேன்.

1996-97ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சர் சிதம்பரம் அறிவித்துள்ள இரண்டு புதிய ஈட்டுறுதித் திட்டங்களையும் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நாடும் வரவேற்கிறது. அதிலே ஒன்றுதான் ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம் - 'ஜீவன் சுரக்ஷா' இரண்டாவது; மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம் 'ஜன் ஆரோக்யா', 'ஜன்' என்றால் மக்கள். 'ஆரோக்யா' என்றால் நலம். மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம். இதில் ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம் இந்திய நாட்டின் நடுத்தர வர்க்கத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு திட்டமாகும். இத்திட்டம் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது, இத்திட்டத்தில் சேருவோருக்கு ஒரு ஊதியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது. மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம் குறைந்த செலவில் மருத்துவப் பாதுகாப்புத் திட்டமாக அமைகிறது.

இந்த இன்சூரன்ஸ் திட்டம் டெல்லியில் இருந்து மாத்திரம் வெற்றிகரமாகச் செயல்பட முடியாது என்பது என் கருத்து. இந்தத் திட்டத்திற்குப் பஞ்சாயத்துக்கள்கூட தங்களின் ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும். வீட்டுக்கு வீடு, குடும்பத்திற்குக் குடும்பம் இத்திட்டத்தைப் பரவலாக்க வேண்டும். இத்திட்டம் பரவலாக்கப்பட வேண்டுமேயானால் மாநில அரசுகளுக்கு இதிலே உரிமை தரப்பட வேண்டும் என்று பிரதமரையும் நிதி அமைச்சரையும் கேட்டுக் கொள்கின்றேன்.


தனியாருக்கோ, கூட்டுத் துறையிலோ இத்திட்டம் விடப்படலாமா என்பது இப்போது விவாதப் பொருளாக இருந்து வருகிறது. நாடாளுமன்றத்திலும் அதுபற்றிப் பேசப்பட்டது. ஏடுகளிலும் அத்தகைய கருத்துக்கள் வந்துகொண்டு உள்ளன. எனவே, இத்திட்டத்தில் மாநில அரசுகளுக்கு உரிமை வழங்குவதில் தவறு இருக்க முடியாது. அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று மத்திய அரசையும் பிரதமரையும், நிதி அமைச்சரையும் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே வங்கிகளெல்லாம் இப்போது மத்திய அரசின் பொறுப்பிலேதான் உள்ளன. அதற்கு மாறாக மாநில அரசுகளே வங்கிகளை நடத்துகிற அனுமதியைப் பெற மத்திய அரசு வழிவகைகளை வகுக்கலாம். அனைத்திந்திய அளவிலே செயல்படும் நிதி நிறுவனங்கள் அனைத்துமே, மும்பை மற்றும் கல்கத்தா போன்ற நகரங்களைத்தான் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு



வருகின்றன. இதனால் இந்த நிதி நிறுவனங்களின் நிதி உதவி வழங்குகின்ற நோக்கத்தில், அருகில் உள்ள மாநிலங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது என்ற ஐயப்பாடும் எழுகிறது. இந்த ஐயப்பாட்டைப் போக்கவும், பரவலாக்கப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையிலே நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஒரே அளவில் வளர்ச்சி அடைவதற்கான வழிவகை செய்யவும், ஒரு பெரும் அளவிலான அனைத்திந்திய வளர்ச்சி நிதி உதவி நிறுவனம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

எனவே 1996-97-ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ''அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்தின்'' தலைமையிடத்தை, சென்னையில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.''





இருண்டதோர் பாரதத்தில்
இயற்கையில் எழுந்த வெய்யோன்
மருண்டதோர் மனித ஜாதி
மருட்சிக்கு மருந்தாய் நின்றோன்
அருந்திறன் உள்வாய் தோன்றி
ஆக்கிய கவிதை ஊற்று
வருஞ் சமுதாய முற்றும்
வகைபடச் சொன்ன மேலோன்!

இந்திய ஒருமைப் பாட்டை
எப்பொழுதோ உரைத்தான்
சந்திர மண்ட லத்தைத்
தான்பார்க்க நினைத் திருந்தான்
யந்திரத் தொழில் நுட்பங்கள்
அனைத்தையும் கனவு கண்டோன்
மந்திரக் கவிஞன் அம்மா
மாகாளி தந்த சக்தி!





எத்தனை தீர்க்க ஞானம்
எத்தனைப் புதிய சொற்கள்
எத்தனை உணர்ச்சி வேகம்
எத்தனை பக்தி மோகம்
இத்தனைக் கருத்தைச் சொன்ன
இயற்கவி வாழ்ந்த நாளில்
எத்தனைப் பேருணர்ந்தார்?
இப்பொழு துணர்கின் றாரே!

– கவியரசு கண்ணதாசன்
(1981-ல் பாடியது)

# மந்திரக் கவிஞர்

## கவியரசு கண்ணதாசன்

# அண்ணாவின் ஆதரவும், பெரியாரின் பரிவும்

- கலைஞர்

நான் எழுதி நடித்த 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டவர் 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரால் ஒரு கலை மன்றத்தைத் துவக்கி, கழகப் பிரசார நாடகங்களை நடிப்பது என்ற தீர்மானத்துடன் என்னை அணுகினார். நானும் அதற்கு ஒப்புதல் அளித்து, முதல் முதலாக நாடகக் குழு விழுப்புரத்தில் முகாமிட்டது. என்னையும் அந்த மன்றத்தில் இணைந்து நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் எழுதும் நாடகத்தில் மட்டுமே நடிப்பது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

## ''கருணா, போய் வருகிறேன்!''

ஒரு நாள் நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் பெரியார் வந்திருந்தார். இன்னொரு நாள் அண்ணா வந்திருந்தார். அவரிடத்திலேயே நாடக மன்ற உரிமையாளர் பத்து ரூபாய் கடன் கேட்டு வாங்கிய நிகழ்ச்சியையும், அண்ணா புன்னகையோடு அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்த நிகழ்ச்சியையும், நாடகம் முடிந்து ஊருக்குப் போகுமுன், அண்ணா அவர்கள் என் முதுகில் தட்டி, ''கருணா, போய் வருகிறேன்'' என்று அன்பொழுகக் கூறியதையும் என்னால் மறக்கவே முடியாது.

திராவிடம் திராவிடர் என்ற உத்வேகத்தை நாட்டில் எழுப்புவதற்காகத் 'திராவிட நாடு' என்கிற கிழமை இதழை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கினார்கள். அதனையொட்டித் 'திராவிடர் கழகம்' என்ற பெயரால் ஒரு துணை மன்றம் போன்ற அமைப்பினை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் உருவாக்கினார். அந்தத் துணை அமைப்பு எதிர்காலத்தில் நாடு தழுவிய இயக்கமாக ஆகுமென்று அன்று யாரும் எதிர்பார்த்திட்டதில்லை.

நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்ணா அவர்கள் இருந்ததால் கட்சி வளர்ந்திடவும், புதிய வேகம் கொண்டிடவும், புதிய குறிக்கோள் பெற்றிடவும் வழிமுறை காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் துடித்தார்கள். நீதிக் கட்சியில் இருந்த பெரும் தலைவர்கள் மாட மாளிகை, மல்லிகை மஞ்சம், கூட கோபுரம், கொட்டு முழக்கு என்றெல்லாம் ஆடம்பரப் பிரியர்களாக இருந்தார்கள். குடிசைகளும், அங்கேயெழும் குரல்களும் அவர்கள் காதில் விழ வாய்ப்பில்லை. அத்தகையோர் பிடியிலிருந்த நீதிக்கட்சியை அண்ணா விடுவிக்க முயன்றார்.

1944 ஆம் ஆண்டில் தான் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கிவிட நீதிக்கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்றுவிடாமல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து, கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.

எதிர்ப்புகளை முறியடிக்கவும் நீதிக் கட்சியை ஏழைகளின் இல்லத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப்புகழ் படைத்த அந்தத் தீர்மானத்திற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர்.

## அண்ணா ஏற்படுத்திய புதிய திருப்பம்

'நீதிக்கட்சி' என்ற பெயரை மாற்றித் 'திராவிடர் கழகம்' என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், வெள்ளையன்



ஆட்சியால் தரப்பட்ட 'சர்', 'ராவ்பகதூர்', 'திவான் பகதூர்' போன்ற பட்டங்கள் துறக்கப்பட வேண்டுமென்றும், கௌரவ நீதிபதி மற்றும் நியமனப் பதவி கொண்டவர்கள் அவைகளை இராஜினாமா செய்யவேண்டுமென்றும், தங்களுடைய பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டுமென்றும் அண்ணாவின் தீர்மானம் முழக்கமிட்டது.

35 மணி நேர விவாதத்திற்கு அந்தத் தீர்மானம் உள்ளாகியது. கட்சியின் ஆய்வுக் குழு அண்ணாவின் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது. பின்னர் பொது மாநாட்டினில் அண்ணாவின் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டு, பிறகு இறுதியில் அண்ணா விளக்கவுரை வழங்கினார். அதனைக் கட்சித் தோழர்களும், பொது மக்களும் தங்கள் ஆர்வமிகுந்த கையொலிகளால் வரவேற்றவாறு இருந்தனர். அதனைக் கண்ட நீதிக் கட்சிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவராக மாநாட்டை விட்டு வெளியேறினார்கள். இறுதியில் அண்ணா தீர்மானம் இடி முழக்கமெனக் கையொலிகளுக்கிடையே நிறைவேறியது. பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக் கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்.

புதுவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழுமூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை, பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடித்துவிட்டனர்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று. மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து நூறாக, மாநாட்டு முகப்புக்கெதிரிலே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

''திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!'' என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

''வா! என்றழைப்பதுதான் தமிழர் பண்பு, போ என்று கூறக் காரணம் யாதோ?'' என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றிவைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்திவிட்டார்கள் எதிரிகள்.

அவ்வளவுதான். அமளி தொடங்கிவிட்டது. பெரியாரையும், அண்ணாவையும், ஏனைய



தலைவர்களையும் வண்டிகளிலும் ரிக்ஷாக்களிலும் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டுப் பாரதிதாசனும், நானும், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோரும் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தோம்.

**அந்தச் சம்பவம் இனிக்கிறது!**

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகிவிட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்து விட்டார்கள். அவரது காலணியொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ்!

அது எப்படியிருந்திருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்தவிதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான் தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்து விடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்றுகொண்டு அந்த வீட்டை ஒருமுறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்துகிடந்தன. காலி செய்யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏராளமாக இருந்தன. அந்த வீடுதான் கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலை மயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளினார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந்தேன். நான் இறந்து விட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துதான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந்தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்தபோது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்துவிட்டது.

''ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ இப்படிச் சாகக் கிடக்கிறதே?'' என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

இதற்கிடையில் காலையில் கலைக்கப்பட்ட கழக மாநாடு, மீண்டும் மாலையில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் சொன்ன வாசகம் தான், ''காலையில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்பதாகும்.

**காயங்களுக்கு மருந்திட்ட பெரியார்!**

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக்கிறார்கள். பெரியாரும் அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப் போயினர். விடியற்காலை நாலு

> ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வோர், அதன் பங்காளிகளாக இருந்து செயல்பட வேண்டுமேயல்லாமல், கூலிக்காரர்களாக இருந்து குறைபட்டுக்கொண்டே இருக்கக்கூடாது.
>
> – தந்தை பெரியார்

> ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பனைக் காட்டிலும் நெருங்கிய உறவினர் எவருமில்லை
>
> – அறிஞர் அண்ணா

மணிக்குத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து அவரிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக்கூடுமென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார், என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, முஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி, தலைவர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங்காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத்தழுவிக் கொண்டு, ''சுகமாக இருக்கிறாயா?'' எனத் தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். ''என்னுடன் வா, போகலாம்'' என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

''குடியரசு துணை ஆசிரியனாக இரு!'' என்று பெரியார் பணித்ததோடு மட்டுமல்லாமல், அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து, அதனைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அதிலும் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டிக்கு, மாலைச்சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதர செலவுகள் ஐந்து ரூபாய், மீதம் ஐந்து ரூபாயை என்னை அண்டி வந்த அருமை மனைவிக்கு - பத்மாவிற்கு மாதந்தோறும் திருவாரூக்கு மணியார்டர் செய்து வந்தேன்.

எப்படியோ பிள்ளை சம்பாதிக்கிறான் என்று என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் உற்ற சகோதரிகளுக்கும் பெருமகிழ்ச்சிதான்.

காலை எட்டு மணிக்கொல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அது பற்றிய விளக்கங்களை அறிவித்து அதனைச் செயல்படுத்துகிற வழிவகைகளை நாங்கள் தொடங்கிவிட வேண்டும். பிறகு அலுவலக வேலை. மாலையில் பெரியார் அலுவலகம் வருவார்.

'குடியரசு' இதழில் நான் எழுதிய அண்ணாமலைக்கு அரோகரா!' என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை 'தீட்டாயிடுத்து' என்ற துணைத் தலையங்கமாகும்.

ஒவ்வொரு நாளும் இரவு பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு சமுதாயச் சீர்திருத்தங்கள், அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். எங்களுக்குத் தூக்கம் வருவதைத் தெரிந்து கொண்ட பிறகே அவர் தூங்கக் கிளம்புவார்.

ஓராண்டுக் காலம் 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிப் பெரியாரிடம் கல்வி கற்கும் மாணவனாக இருந்தேன். அதற்குப் பிறகு கோவையிலிருந்து எனக்கொரு அழைப்பு வந்தது. திரைப்படத்திற்கு வசனம் எழுத வேண்டுமென்ற அழைப்புத்தான் அது. அழைப்பை அனுப்பியவர். ஏ.எஸ்.ஏ.சாமி அவர்களாவார். என்னுடைய நண்பர் முத்து கிருஷ்ணன் என்பவரின் துணையுடன் கோவை சென்று, திரு. சாமியிடம் விவரங்களை அறிந்தேன். கோவை ஜூபிடர் நிறுவனத்தின் சார்பில் எடுக்கப்பட்ட 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு நான் வசனம் எழுத வேண்டும் என்று கூறப்பட்டது. பெரியாரிடம் தெரிவித்தேன். அவரும் போய் வா! என்று விடை கொடுத்தார்.

– 'நெஞ்சுக்கு நீதி'
என்னும் நூலிலிருந்து

*உயர்ந்த உள்ளங்களுக் கிடையில் தான் தூய்மையான தோழமை மலரமுடியும்*

*– சார்லஸ் கிங்ஸ்லி*

# கலைவாணர் விழாவில் கேட்டவை..

இயல், இசை, நாடக மன்றத்தில் இதற்குமுன் தலைவராக இருந்தவரோ குன்னக்குடி; இப்போதுள்ள என் ஊரோ காரைக்குடி; அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் ஊரோ இளையான் குடி; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புகழ் பெற்றுத்தந்த ஊர்களில் ஒன்று கல்லக்குடி.

– திரு. இராம. நாராயணன்

கலைவாணன் அவர்கள் கடைசியாகக் கலந்துகொண்டது அண்ணாவின் படத்திறப்பு விழா; அண்ணா அவர்கள் கடைசியாகக் கலந்துகொண்டதோ கலைவாணர் சிலைதிறப்பு விழா.

– நடிகர் சிவகுமார்

சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர். போல நீண்ட காலம் திரையுலகில் நிலைத்திருந்து புகழ்பெறும் நடிகர்கள் இன்று யாரும் இல்லை. அதற்குக் காரணம் நாடகத் தொழில் நசித்துப் போய்விட்டதுதான்.

– நடிகர் வி.கே. இராமசாமி

திரைப்படங்களின் மூலமும் சமுதாய விழிப்புணர்ச்சியை உண்டாக்கமுடியும் என்று நிரூபித்தவர் கலைவாணர்..

– திரு.ஏ. நடராஜன்

எங்களால் மக்களைச் சிரிக்க வைக்க மட்டும்தான் முடிந்தது; கலைவாணரால் மக்களைச் சிரிக்கவைக்கவும், சிந்திக்க வைக்கவும் முடிந்தது.

– நடிகர் செந்தில்

முன்னாள் மன்னர்கள் முத்தமிழை வளர்க்க ஆட்சி செய்தார்கள்; இன்று முத்தமிழே ஆட்சி செய்கிறது; அதனால்தான் கலைவாணர் விழா இந்தனைச் சிறப்பாக நடக்கிறது.


– நடிகர் எஸ்.ஏ. சந்திரசேகர்

அழியாத வரலாற்றின் கிழியாத தாளாக விளங்குகிறார் கலைஞர் என்பதன் காரணமே, இப்படி மதிக்கப்பட வேண்டியவரை மதித்துப் பழகியதால்தான்.

– அரசு மணிமேகலை

கலைத்துறைக்கே ஆக்சிஜன் போன்றவர் நமது கலைஞர்; அதனால்தான் என்போன்றவர்களல்லாம் இந்தச் சமுதாயத்தில் இன்றைய தினம் மதிப்போடு வாழமுடிகிறது. அதற்கு வழிவகுத்தவரே கலைவாணர்தான்.

– நடிகர் ராதாரவி



வில்லேருழவரைப் பகைத்துக்கொண்டாலும் கொள்ளலாம், சொல்லேருழவரைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்று குறளார் சொன்னதை மெய்ப்பித்த அரசு நடத்தும் இவ்விழாவில், என்போன்றோர் பங்கேற்பதில் பெருமை கொள்கிறோம்.

– சாரதா நம்பிஆரூரன்

எப்போதும் சிரித்துக்கொண்டே இரு என்றெழுதிக் கையெழுத்துப் போட்டார் ஒரு நடிகர்; அப்படிச் செய்தால் பைத்தியம் என்று கூறிவிடுவார்கள்; சிந்திக்கவும் செய் என்று சொன்னவர் கலைவாணர்.


– எம்.என்.ராஜம்

சிரிக்கவும் சிந்திக்கவும் செய்த பெருமை கலைவாணருக்கு மட்டுமல்ல; கலைஞருக்கும் உண்டு என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

– நடிகர் விஜயகாந்த்

சிரிப்பு நடிகர் பலரையும் உருவாக்கினவர் கலைவாணர்; காரணம் நம்மை யாரும் அசைக்க முடியாது என்ற தைரியம்தான். அதேபோல், பாடல் எழுதத் தெரிந்த கலைஞரே தன்படத்தில் என்னையும் பாட்டெழுதச் செய்தார், அத்தகைய துணிவு மிக்கவரின் நல்லாட்சியில் தமிழ்நாட்டு மக்களெல்லாம் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

– கவிஞர் வாலி



மக்களை மகிழச் செய்வதை மாபெரும் தொண்டாகக் கருதினார் கலைவாணர்; அத்தகைய தொண்டனாக இருப்பதில் நானும் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

– இயக்குநர் கே. பாலச்சந்தர்

தம் நடிப்புத்திறமையால் நம்மையெல்லாம் சிரிக்கவைத்து, நாட்டைச் செழிக்க வைத்தவர் கலைவாணர். அவருக்கு விழா எடுத்துப் பெருமைகொள்கிறது இந்த அரசு.

– மாண்புமிகு அமைச்சர்
திரு தமிழ்க்குடிமகன்.

## வளரட்டும் நாடகக் கலை!

நாடகக் கலை வீழ்ந்துவிட்டது; அந்த நிலையை மாற்றியமைத்து, நாடகங்கள் தொடர்ந்து நடைபெற்று அவைகளைப் பார்த்து நடிகர்கள் உண்மையான நடிகர்களாக வளரவேண்டும்; அதற்கு அரசு உதவவேண்டும் என்று கலையுலகின் மூத்த நண்பரான வி.கே. ராமசாமி அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டார். இப்பொழுதுகூட நான் அந்தக் காரியத்தைச் செய்யத் தயாராக இருக்கிறேன். அதேநேரத்தில், வி.கே. ஆர். அவர்களையும் இங்குள்ள நடிகப் பெருமக்களையும் கலையுலக நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன்- இந்தக் கலைவாணர் அரங்கத்தையேகூட அதற்காக ஒப்படைக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. நாள்தோறும் அல்ல; வாரம் ஒரு நாடகமாவது இங்கே நடத்துகிறோம். என்று சொல்வீர்களேயானால் இலவசமாகக் கலைவாணர் அரங்கத்தைத் தருவதற்கே அரசு தயாராக இருக்கிறது. இதை வி.கே.ஆர். அவர்களும், இங்கே வீற்றிருக்கின்ற கலை உலகப் பெருமக்களும் ஒரு அறைகூவலாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கலைவாணர் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்.

– மாண்புமிகு முதல்வர் கலைஞர்

**(3.9.96 அன்று சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கலைவாணர் நினைவு நாள் விழாவின்போது .)**

# சுவைமிகு

## பெண் காவலர்கள் உடை மாற்றம்

**கா**வல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன்:

''பெண் போலீசார் தற்போது அணிந்திருக்கும் உடை அவர்களுக்கு இறுக்கமாக இருக்கிற ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. பெண் டாக்டர்கள், பெண் வக்கீல்கள் சேலை கட்டி மேலே கோட் அணிகின்றனர். அதுபோல் பெண் போலீசாரும் சேலை கட்டி, காக்கி கோட் போட்டு கொண்டையில் பூ வைக்க அனுமதிக்கவேண்டும்...''

உடனே அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் அளிக்கையில், ''எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற அளவுக்கு அவர்கள் ஜோடிக்கப்படுவார்கள்'' என்று கூறியதும் பேரவையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது!

## மேல் மாடம் இல்லாத மனிதர்கள்

**த**மிழக சட்டமன்றத்தில் திரு. மு.க. ஸ்டாலின் (தி.மு.க.) அவர்கள் பேசும் போது கலைஞர் எழுதிய ''உதயசூரியன்'' நாடகத்தில் இருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்டினார்.

அதன் பின்னர் விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய முதலமைச்சர் அவர்கள், மு.க. ஸ்டாலின் பேசிய போது குறிப்பிட்ட பாடல்களைப் பாடினார். வசனங்களையும் மளமளவென்று பேசினார். தொடர்ந்து அவர் பேசும்போது – ''ஸ்டாலின் இதனைப் படித்துப் பார்த்துச் சொல்லி இருப்பார்; நான் இன்று ஞாபகத்தில் வைத்துச் சொல்கிறேன்'' என்று கூறினார்.

உடனே எழுந்த திரு. எஸ். திருநாவுக்கரசு (அ.தி.மு.க.) அவர்கள்:

''பழைய பாடல்கள் தன்னாலேயே ஞாபகத்துக்கு வருகிறதா, மேல் மாடத்தைப் பார்த்தவுடன் ஞாபகத்துக்கு வருகிறதா?'' என்று சிரித்தபடி கேட்டார்.

அவையின் மேல்மாடத்தில், அன்றைய தினம் முதல் அமைச்சர் அவர்களின் மனைவியார் வந்து அமர்ந்து இருந்ததுதான் இதற்குக் காரணம்.

உடனே எழுந்த முதல்வர் அவர்கள் சிரித்துக்கொண்டே – ''ஞாபகம் மாடத்தில்தான் இருக்கிறது. சில பேர்களுக்கு மாடமே இருப்பதில்லை'' என்று உச்சந்தலையில் கை வைத்துக் காட்டிப் பேசினார். உடனே சட்ட சபையில் எழும்பிய சிரிப்பலை அடங்க இரண்டு நிமிடம் பிடித்தது.

## பால்பண்ணைத் தொழிலாளர்கள்

**த**மிழக சட்டப்பேரவையில் தொழிலாளர் நலத்துறை மானிய விவாதத்துக்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் ஒரு

கோரிக்கையை எழுப்பினார். அவர் கூறியதாவது:

''மாதவரம் பால் பண்ணையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் 1980-ல் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதில் ஒரு பகுதியினருக்கு 1989-ல் கலைஞர் முதல்வராக வந்த போது மீண்டும் வேலை கொடுத்தார். மீதி உள்ளவர்களுக்கும் வேலை தரவேண்டும். 1980 முதல் சர்வீஸ் போட்டு பணியில் சேர்ந்துக் கொள்ள வேண்டும். தாயிடம் தான் பால் கேட்டுக் குழந்தை அழும். அப்படி உங்களைக் கேட்கிறோம். கலைஞர் அவர்கள் இதில் நல்ல முடிவு அறிவிக்கவேண்டும்.''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அதற்கு இவ்வாறு பதில் அளித்தார்:

''நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 1989-ஆம் ஆண்டு 489 தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தோம். சுப்பராயனும் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களும் அமர்ந்து ஆலோசித்துத் தொழிலாளர்களின் பட்டியலைக் கொடுத்தால், அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

1980ல் இருந்து சர்வீஸ் கணக்கிட்டு வேலை தரவேண்டும் என்று சுப்பராயன் கேட்டார். என் பெயரில் ''கருணை'' என்பது நீளமாக – அதிகமாக இருக்கிறது. ''நிதி'' என்பது குறைவுதான். எனவே நிதி நிலையைப் பொறுத்து எல்லாவற்றையும் யோசித்துச் செய்வோம். பால் இல்லை என்று சொல்கிற பாவி அல்ல இந்தத் தாய்.'' என்று முதல்வர் அவர்கள் கூறியதும் அனைவரும் சிரித்துவிட்டனர்.

## என்ன கோபமோ?

''**மா**ம்பழத்தில் ருசிமிக்கது சேலத்து மாம்பழமா, தருமபுரி மாம்பழமா? என்று பேரவைத் தலைவர்தான் ருசிபார்த்து முடிவுசொல்ல வேண்டும்'' என்றார் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. தாமரைக்கனி (அ.தி.மு.க.) அவர்கள் உடனே எழுந்து ''எங்கள் ராஜபாளையத்தில் விளையும் பஞ்சவர்ணம் மாம்பழம் ருசிமிக்கது; நான் வேண்டுமானால் கொண்டுவந்து தருகிறேன்; பேரவைத் தலைவரே சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லட்டும்'' என்றார்.

சிரித்தபடி பேரவைத் தலைவர் இவ்வாறு சொன்னார் ''பொதுப் பணித்துறை அமைச்சருக்கும், தாமரைக்கனி அவர்களுக்கும் என்மீது என்ன கோபமோ தெரியவில்லை. நான் சர்க்கரை வியாதிக்காரன், என்னைப் போய் மாம்பழம் தின்னச் சொல்லுகிறார்கள்!''

அவர் இவ்வாறு கூறியதும் உறுப்பினர்கள் அனைவருமே சிரித்துவிட்டனர்.

சொல்லாடல்

# சொன்னால் நம்பமாட்டீர்கள் !

**சின்ன அண்ணாமலை**

திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு சென்னைக்கு ரயில் ஏற ஜங்ஷனுக்கு வந்தேன். முதல் வகுப்பு டிக்கெட் கையிலிருந்தாலும் அந்த வண்டியிலே இடமில்லாமல் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு போலீஸ் ஆபீசர் என்முன்னால் வந்து ''உங்களை சி.எம். கூப்பிடுகிறார்'' என்றார். ''யார்-திரு அண்ணா அவர்களா?'' என்றேன். ''ஆம்'' என்றார். ''சரி'' என்று அவரைப் பின்பற்றி அண்ணா இருந்த கம்பார்ட்மெண்ட்டுக்குப் போனேன். அண்ணா என்னை அன்புடன் வரவேற்று, ''சென்னைக்குத் தானே?'' என்றார்.

''ஆம்'' என்றேன்.

''என்னுடன் பிரயாணம் செய்வதில் ஆட்சேபமில்லையே?'' என்றார்.

''ஆட்சேபமில்லை; ஆனால்.. தங்களுக்கு அசௌகரியமாக இருக்குமே?'' என்றேன்.

''எனக்கு ஒரு அசௌகரியமுமில்லை, சொல்லப்போனால் உங்களுக்குத்தான் அசௌகரியமாக இருக்கும்'' என்றார், சிரித்தபடி.

''எனக்கென்ன அசௌகரியம்?'' என்றேன் நான்.

''சீக்கிரத்தில் தூங்கவிடாமல் வெகுநேரம் நான் பேசிக் கொண்டிருப்பேன்'' என்றார், அவர்.

''தங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவோ பேர் தவம் கிடக்கிறார்கள். வலிய வரும் சீதேவியை இழந்து விடுவேனா?'' என்று சொல்லி அவருடன் பிரயாணத்தைத் துவக்கினேன்; ரயில் நகர ஆரம்பித்ததும், ''தங்களிடம் முதல்வகுப்பு டிக்கட் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''வித்-அவுட்டில் வருவதாக நினைத்து விட்டீர்களா? இதோ எனது முதல்வகுப்பு டிக்கட்.'' என்று டிக்கெட்டைக்காண்பித்தேன்.

''என் தம்பிமார்களில் சிலர் இப்படி என்னுடன் ஏறிக்கொண்டு அந்தத் தைரியத்தில் டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்ததுண்டு; அவர்களுக்காக நான் டிக்கட் வாங்கிவிடுவது வழக்கம்.அதனால்தான் கேட்டேன்.'' என்றார்.

''நான் உங்களை நம்பிப் பிரயாணம் செய்பவனில்லையே?''

''நீங்கள் சொல்லும் அரசியல் கருத்து எனக்குப் புரிகிறது. திருச்சிக்கு எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டத்திற்காக வந்தேன்'' என்றேன்.

''ரொம்பத் தாக்கிப் பேசினீர்களோ?'' என்று சொல்லிவிட்டு, ''நீங்கள் தாக்கிப் பேசினாலும் நானும் என் தம்பிமார்களும் கோபப்படுவதில்லை ; ஏனென்றால் அதிலுள்ள நகைச்சுவை எங்களைச் சிரிக்க வைத்து விடுகிறது.'' என்றார்.

''வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷிப் பட்டம்'' என்றேன்.

''அதுசரி, தி.மு.க. ஆட்சி எவ்வளவு நாள் இருக்குமென்று நினைக்கிறீர்கள்?'' என்று ஒரு எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்டார். நான் சிறிது யோசனை செய்தேன். ஆனால் அண்ணாவோ, ''எதற்கு யோசனை செய்

கிறீர்கள்? உங்கள் மனதில் இருப்பதைச் சொன்னால்தானே எனக்கும் சில விஷயங்கள் புரியும்'' என்றார்.

''நூல் தீருகிறவரை சுழி சுற்றிக் கொண்டேயிருக்கும்'' என்றேன்.

''விளக்கம் தேவை'', என்றார்.

''இந்தி எதிர்ப்பு என்ற மாயை தீரும்வரை தி.மு.க. ஆட்சி இருக்கும்.'' என்றார்.

''இதுதான் காங்கிரஸ்காரர்களுடைய அபிப்பிராயமா?'' என்றார்.



''பெரும்பாலோருடைய எண்ணம்.'' என்றேன்.

''அதுசரி. 67 தேர்தலில் காங்கிரஸ் தோற்றதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தீர்களா?'' என்றார்.

''என் சொந்த அபிப்பிராயம் 62 தேர்தலில் தங்களைக் காஞ்சிபுரத்தில் தோற்கடித்ததுதான் 67-ல் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம்.'' என்றேன்.

''எப்படி?'' என்றார்.

''தங்களை 62ல் வெற்றிபெற விட்டிருந்தால், தாங்கள் இவ்வளவு முனைப்பாக வேலைசெய்து, தங்களுக்குப் பரம எதிரியான ராஜாஜிகூடவெல்லாம் சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கமாட்டீர்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டிருந்திருப்பீர்கள். காலம் ஓடியிருக்கும். இதை நான் அப்போதே காமராசரிடம் சொன்னேன். காஞ்சிபுரம் தேர்தல் கூட்டங்களில் பேசவும் மறுத்துவிட்டேன்.'' என்றேன்.

''தாங்கள் சொல்வது மனித இயல்பை ஒட்டிய சங்கதிதான். இருந்தாலும், மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தியபிறகு மக்களுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டாமா?''

''மக்களுக்கு மதிப்புக் கொடுப்போம். ஆனால், உங்கள் கட்சியை நாங்கள் மதிக்க முடியவில்லையே!'' என்றேன்.


''பந்தை காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் எங்கோ வீசி எறிய, அது உங்கள் மீதே வந்து தாக்கும்போது நீங்கள் வேறு யாரையும் குறைகூறிப் பயன் இல்லை!'' என்றார்.

பின்னர் இருவரும் படுத்துத் தூங்கி விட்டோம். காலை எழுந்ததும் செங்கற்பட்டு ஸ்டேஷனில் அன்புடன் எனக்குக் காலை ஆகாரத்தை. அவரே பரிமாறினார். அது முடிந்ததும், என்னிடமிருந்த ஒரு புத்தகத்தை வாங்கிப் பார்த்தார். அது நான் எழுதிய நாவல், தலைப்பு ''மானமே பெரிது,'' என்பதாகும். ''இந்த நாவல் நம் சந்திப்பின் நினைவாக என்னிடமே இருக்கட்டும், அதில் அன்பளிப்பு என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்'' என்று புத்தகத்தை நீட்டினார். கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். மாம்பலம் ஸ்டேஷன் வந்ததும் அண்ணாவிடம் விடைபெற்றுக்கொண்டு ரயிலைவிட்டு இறங்கினேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள், உண்மையில் என் மனதில் அதுவரையில் அண்ணாவைப் பற்றி இருந்த துவேஷ எண்ணம், ஸ்டேஷனை விட்டு ரயில் போனதைப் போல் என் இதயத்தை விட்டுப் போய்விட்டது.

– 'குமுதம்' இணைப்பு – 1970.

# கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்



சென்னை மாநகரம் தமிழ் நாட்டின் தலை நகரமாகவும், நம் நாட்டின் நான்காவது பெரிய நகரமாகவும் உள்ளது. சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதி ஆகியவற்றின் மக்கட் தொகை முறையே 40 இலட்சம் மற்றும் 60 இலட்சமாகும்.

சென்னை மாநகரின் மைய வணிகப் பகுதியான ஜார்ஜ் டவுனில், இரும்பு, காய்கறிகள், பழவகைகள், மலர், எழுதுப் பொருட்கள் மற்றும் காகிதம், துணிவகைகள், தானிய வகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனைகளும் மற்றும் குடியிருப்புப் பகுதிகள், அலுவலகங்கள் ஆகியவை குவிந்துள்ளன. இப்பகுதிக்கு வருவோர் அதிகமாகி வருவதால் இட நெருக்கடி, சுகாதாரக் குறைவு, போக்குவரத்து நெரிசல் போன்ற இன்னல்கள் ஏற்படுகின்றன.

இந்த மைய வணிகப் பகுதிக்குப் பெரிய அளவில், பொது மக்களால் மட்டுமின்றி நேரடித் தொடர்புடைய எல்லாத் தரப்பினர்களும், வியாபாரிகள், தொழிலாளர்கள், வாகனங்கள், ஆகியவற்றால் தூய்மை பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கூறப்பட்ட மைய வணிகப் பகுதியின் இடையூறுகளைச் சாத்தியமான முறையில் களையும் பொருட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நகரத்திலிருந்து அதிக தூரத்தில் இல்லாத மற்றும் நெரிசல் இல்லாத இடங்களில் மொத்த விற்பனை களுக்கு ஒரு புதிய அங்காடி வளாகத்தையும் மற்றும் நகர அளவினான பேருந்து மற்றும் சரக்குந்து முனையங்களையும் அமைக்கத் திட்டமிட்டது. அந்த வகையில், ஜார்ஜ் டவுன் பகுதியின் நெரிசலைத் தவிர்ப்பதற்கும் மற்றும் அப்பகுதிகளில் சுகாதாரமான சூழ்நிலையை

**சென்னை – கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 28.8.96 அன்று திறந்து வைக்கப்பட்டது. காய், கனி, மலர் அங்காடிப் பிரிவுகளுக்கு முறையே பெரியார், அண்ணா, காமராஜர் பெயர்களை அப்போது அவர் சூட்டினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து:**


**''கொத்தவால்சாவடியில் மிகுந்த போக்குவரத்து நெரிசலில் 4 ஏக்கர் பரப்பளவில் கடைகளை வைத்திருந்த வியாபாரிகளுக்கு, 300 ஏக்கர் பரப்பளவில் வசதியாக வியாபாரம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் இங்கு செய்யப்பட்டுள்ளன.**

**எங்களுக்கு வீட்டு வசதி தேவை என்று வியாபாரிகள் கோரினர். அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரப்படும்.**

**இரண்டு நாட்களுக்கு முன்பு அதிகாலை 5 மணிக்கு வந்து இந்த அங்காடி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கடைகள் முழுவதையும் சுற்றிப் பார்த்தேன். கழிப்பறைகள் மேலும் அதிகமாகக் கட்டுவதற்கான யோசனைகளைக் கூறியுள்ளேன். வீடுகள் கட்டுவதற்கான இடம் குறித்துப் பரிசீலித்தேன்.**

**இந்த மொத்த விற்பனை அங்காடியின் விற்பனையை ஒழுங்குபடுத்தவும், பராமரிக்கவும் அரசு அதிகாரிகள், வியாபாரிகள்-சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஏழுபேர் கொண்ட சந்தை மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அங்காடியின் பராமரிப்புச் செலவு முழுவதையும் ஓராண்டுக்கு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வியாபாரிகள் கோரினர். அங்காடியைப் பராமரிக்கத் தேவையான முழு ஒத்துழைப்பை எம்.எம்.டி.ஏ.வும், அரசும் அளிக்கும்.**

**கொத்தவால் சாவடி காரணமாகத் தற்போது சுகாதாரக் கேட்டுடன் பாரிமுனை பேருந்து நிலையம் விளங்குகிறது. கோயம்பேட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும். ஏற்கெனவே பேருந்து வசதி இருந்தாலும், கூடுதல் பேருந்து வசதிக்கு அரசு ஏற்பாடு செய்யும்''.**




உருவாக்கும் பொருட்டும் கோயம்பேட்டில் அழுகு பொருட்கள், துணிவகைகள், தானிய வகைகள் ஆகியவற்றிற்கான அங்காடி வளாகமும், சாத்தான்காட்டில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகமும், மாதவரத்தில் பேருந்து மற்றும் சரக்குந்து முனையமும் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

**வியாபாரிகள் விருப்பம்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தின் நோக்கங்களை வியாபாரிகளின் சமூகத்தினர்களுக்கு எடுத்துரைத்திருந்தது. வியாபாரிகளில் பெரும் பகுதியினர் கோயம்பேடு செல்வதற்குத் தங்கள் எண்ணத்தை மட்டுமின்றித் தங்கள் விருப்பங்களையும் தெரிவித்திருந்தனர். இந்த வியாபாரிகள், இந்தத் திட்டம் அவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அளிக்கவிருக்கும் பயன்பாடுகளை மட்டுமின்றி அவர்களுக்குத் தற்போதைய இடங்களில் கிடைக்காத, ஆனால் புதிய அங்காடியில் கிடைக்கவிருக்கும் உடைமை-உரிமையின் பாதுகாப்பினை உணர்ந் தனர். மேலும் அவர்கள் இதைத் தங்கள் எதிர்காலத்திற்குச் செய்யும் ஒரு முதலீடாகவே நினைத்தனர்.

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்**

கோயம்பேட்டில் 295 ஏக்கர் நிலப் பரப்பளவில், இந்த மொத்த விற்பனை அங்காடி வளாகமானது, அழுகு பொருட்கள் மற்றும் துணிவகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனைகளையும் மற்றும் அதனுடன் கூடிய தேவையான வசதிகளையும் உள்ளடக்கியது. இத்திட்டத்தின் அமைவிடம் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் 60.04 ஏக்கர் நிலப்பரப்புகளையும் மற்றும் தனியார் வசமான 235.68 ஏக்கர் நிலப்பரப்பினையும் கொண்டது.

இதுவரை 166.05 ஏக்கர் தனியார் வசமான நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மீதமுள்ள 69.63 ஏக்கர் நிலப்பரப்பு, பல்வேறு நில எடுப்பு நிலைகளில் உள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் ஒட்டி யுள்ள பகுதிகள் கையகப்படுத்தப்பட்டவுடன், தானிய அங்காடி (சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பளவில்) மற்றும் துணி அங்காடி (சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில்) ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதல் கட்டமாக, ரூபாய் 77 கோடி பொருட்செலவில், மலர் 456 கடைகள், கனி 436 கடைகள் மற்றும் காய்கறி 1422 கடைகள் ஆகியவற்றைக் கொண்ட அழுகு பொருள் அங்காடிகளில் விரிவாக்கம் மேற்கொள்ளப் பட்டது. இவ்வங்காடிகளில் கட்டப்பட்டுள்ள கடைகளின் தரைப்பரப்புகளின் அளவு 150 சதுர அடியிலிருந்து 2400 சதுர அடி வரை வேறுபடுகிறது. இங்கு உணவகங்கள், பெட்டிக்கடைகள், கிடங்குகள், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், தொலைபேசி இணைப்பகம் மற்றும் இதர வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடைகள் 1987-ஆம் வருடத்திலிருந்து ஜார்ஜ் டவுன் வியாபாரிகளுக்குச் சலுகை

விலையிலும் மற்றும் வேறு இடங்களில் வியாபாரம் செய்துவரும் பிற வியாபாரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் வேறு இடங்களில், விவசாயப் பொருட்கள் உற்பத்திச் சந்தைக் குழுவால் விரிவு செய்யப்படும் அழுகுபொருட்களுக்கான அங்காடிகள் போல் அல்லாமல் இந்தப் புதிய அங்காடி, அதன் வடிவ அமைப்பிலும் அங்கு உள்ள வசதிகளைப் பொறுத்த மட்டிலும் தன்னிகரற்றதாகும்.

இம்மூன்று பொருட்களுக்கான (மலர், கனி மற்றும் காய்கறி) அழுகுபொருள் அங்காடிகளைத் திட்டமிடுதலிலும் மற்றும் வடிவமைப்பதிலும் அவைகளின் தனிப்பட்ட இயற்கைத் தேவைகளான உட்புற இடவசதிகள், விற்பனைப் பகுதிகள், சரக்குகளை ஏற்றி இறக்கும் பகுதிகள், சேமித்து வைக்கும் பகுதிகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு போதுமான வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இவைகள், பொதுப்பணிகளான பேருந்து வசதிப் பகுதிகள், உணவகங்கள் மற்றும் சரக்குந்து வாகனங்களை நிறுத்தி வைக்கும் பகுதிகள் ஆகியவற்றுடன் தொடர்புடையன. அழுகும் தன்மையுடைய உணவுப் பொருட்களினால் ஒரு குறித்த அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகும். இவற்றினைச் சுத்தம் செய்யும் பொருட்டு, பாதசாரிகள் பயன்படுத்தும் பகுதிகள் மற்றும் பொருட்கள் உள்வந்து மற்றும் வெளியே செல்லும் வழிகளைப் பாதிக்காத வண்ணம் கடைகளின் பின்புறத்தில் தனிச்சந்துகள் அமைக்கப் பட்டுள்ளது. இந்த மனைப்பிரிவு, பொருட்கள் உள்வரும் பணியும், பொருட்கள் வெளியே செல்லும் பணியும் பாதிக்கப்படாமல், அவைகள் தனித்தனியாகப் பிரிக்கப்படும் வகையில் விரிவு செய்யப்பட்டுள்ளது.

**சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டம்**

இச்சந்தைகளைப் புதிதாக உருவாக்குவதற்கோ, அல்லது வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கோ அல்லது அரசு சார்ந்த நிறுவனத்திற்கோ சட்ட வழிமுறைகள் எதுவும் கிடையாது. எனவே, அவ்வப்போது குறித்துரைக்கப்படும் பொருட்களுக்கான மொத்த விற்பனை அங்காடிகளின் இருப்பிடத்தை ஒழுங்குமுறைப் படுத்தவும், இச்சந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் மேலாண்மை செய்யவும் உதவும் சந்தைக்குழுவை நிறுவுவதற்கும் மற்றும் இது சம்பந்தமான இதர நடவடிக்கைகள் எடுக்க வழிசெய்யவும் ஒரு புதிய சட்டத்தை உருவாக்க அவசியம் நேரிட்டது. ''தமிழ்நாடு குறித்துரைக் கப்பட்டப் பொருட்களின் சந்தைகள் (இருப்பிடத்தை முறைப்படுத்துதல்) சட்டம்'' என்ற ஒரு சட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இயற்றப்பட்டு, அது தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

**சந்தை மேலாண்மை**

இந்த அங்காடி வளாகம், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் அமைக்கப்படும் சந்தை மேலாண்மைக் குழுவால் நிர்வகிக்கப்படும். இக்குழுவில் அரசு அதிகாரிகளும், மற்றும் வியாபாரிகளின் பிரதிநிதிகளும் அங்கத்தினராக இருப்பர். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இந்த அங்காடிகளின் வளர்ச்சி முழுவதுமாக நிறைவு பெற்றவுடன் அங்காடியும், மற்றும் பிற பொது சொத்துக்களையும், சந்தை மேலாண்மைக் குழுவிடம் அதனைப் பராமரிப்பதற்கு ஒப்படைத்துவிடும்.

**நிதி**

முதற்கட்டமாகச் செயற்படுத்தப்படும் அழுகு பொருட்கள் அங்காடி வளாகத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 77 கோடியாகும். இத்திட்டத்திற்கு, அரசு கடனாக ரூ. 14.32 கோடி மற்றும் ஹட்கோ கடனாக ரூ. 15 கோடியும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியின் எஞ்சியுள்ள பகுதியானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்தும் தவணை முறையில் வசூலிக்கப்படும் நிதியிலிருந்தும் பெறப்படுகிறது.

## காலத்தின் காதுகளில்

செக்குமாடுகளாய் சுற்றும்
கடிகார முட்கள்...
காலம்
என் இளமையைப்
பிழிந்துகொண்டிருக்கிறது!

செத்துப்போன
எனது நேற்றுகளை அறிவிக்கும்
செய்தித் தாள்களாய் விழும்
காலண்டர் தாள்கள்!


வரப்போகும்
முதுமையின் நரைகளை
ஞாபகம் செய்து
இப்போதே வருணிக்கும்
சூரிய கிரணங்கள்!

காலமே!
என் இளமையை
அள்ளிக் கொண்டு போய்
ஊதாரித்தனமாய்
செலவழிக்காதே!

நம்பிக்கையோடு
நடக்கிறவர்களுக்கெல்லாம்
பங்கு வைத்துக் கொடு!

மிச்சமிருந்தால்...
தென்றல்... மலர்கள்
கடல்... மலைகள்
என்று
என்றுமிருக்கும்
இயற்கையிடம்
சேர்த்துவிடு!

– பழநி பாரதி



# எங்கள் ஊர்

**பிரச்சினை :**

எங்கள் ஊரான மேட்டூர் அணை தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இங்கு படித்தவர்கள் நிறைந்துள்ளனர். இங்கு மேநிலைப்பள்ளிகளும், உயர்நிலை மற்றும் நடுநிலை, துவக்கப்பள்ளிகளும் பல உள்ளன. இது வட்டத் தலைமையிடமாகவும், சார் ஆட்சியர் அலுவலகம் கொண்டதாகவும் உள்ளது. இங்கு எல்லா வசதிகளும் இருந்தும்கூட இப்பகுதிக்கெனத் தனியாகப் பொது நூலகம் இன்றுவரை இல்லை. குக்கிராமங்களில் கூட இன்று பொது நூலகம் அமைந்துள்ளதைப் பார்க்கமுடிகின்றது. ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க அணையைக் கொண்டுள்ள மேட்டூரில் பொது நூலகம் இல்லாதது வருந்தத் தக்கது. இதற்குத் தாங்கள் ஆவன செய்தால் மேட்டூர் வாழ் படித்த மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

**கா.பெரியசாமி, எம்.ஏ., பி.எட்.,**
எல்.டி.சி. 5, இந்திராநகர்,
மேட்டூர் அணை - 636 401.

**பிரச்சினைக்கான தீர்வு:**

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் 625 ஊர்ப்புற நூலகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் மேட்டூர் அணையிலும் புதிய நூலகம் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு புதிய நூலகம் திறப்பதற்கு அவ்வூர் பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், நூலகம் உடனடியாகத் திறக்க ஆவன செய்யப்படும்.

1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகையற்ற இலவசக் கட்டிடம். 2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட குறைந்த பட்சம் 5 சென்ட் காலிமனை. 3. குறைந்தபட்சம் ரூ. 2.000/- மதிப்புள்ள தளவாடங்கள் 4. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள். 5. குறைந்தபட்சம் ரூ. 1000/- செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளை மேட்டூர் அணை ஊர்பொதுமக்கள் நிறைவேற்றித்தரும் பட்சத்தில் உடனடியாக நூலகம் திறக்க ஆவன செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மேட்டூர் அணையில் கிராமப்புற நூலகம் திறப்பதற்கு மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றி, அதற்கான கருத்துருவை அனுப்பிவைக்குமாறு சேலம் மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரா. கண்ணன். எம்.ஏ., எம்.எட்.**
பொது நூலக இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை -2

**பிரச்சினை:**

எங்கள் ஊர், அலங்கா நல்லூர் ஒன்றியத் திற்குட்பட்ட தெத்தூர் கிராமம் ஆகும். மேற்படி ஊரைச்சுற்றி 13 சிறு ஊர்களும், 15 ஆயிரத்திற்கும்மேற்பட்ட மக்கள் தொகையும் உள்ளது. இவ்வூரில் அரசு பொது மருத்துவமனை 10 ஆண்டுகளுக்கு முன் டாக்டர், நர்ஸ் தங்கி இருந்து, பொதுமக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்துவந்தனர். ஆனால், தற்போது வெறும் மருத்துவ இடம்தான் உள்ளது. டாக்டரோ அல்லது நர்ஸ்சுகளோ தங்குவது இல்லை. அவசர பேறுகால வயிற்றுப்போக்கு, பூச்சிக்கடி இதுபோன்ற அவசர நேர காலங்களில் முதலுதவி சிறிதும் கிடையாது. அவ்வாறு செல்வதென்றால் 30 கி.மீட்டர் தூரமுள்ள மதுரைக்குத்தான் செல்லவேண்டும். அப்படி செல்லவேண்டுமானால் போக்குவரத்து பஸ் வசதியோ, தொலைபேசி வசதியோ கிடையாது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நேரத்தில் சிகிச்சை செய்து உயிர்களைக்காப்பாற்றிட, டாக்டர்களையோ அல்லது நர்ஸ்சுகளையோ அந்த அந்த இடங்களிலேயே தங்கி இருந்து சேவை புரிந்திடச் செய்ய அரசு முன்வரவேண்டுகிறேன்.

**பெ. பால்ராஜ், தலைவர்,**
தெத்தூர் அஞ்சல், பாலமேடு (வழி)
மதுரை மாவட்டம் - 625 503

**பிரச்சினைக்கான தீர்வு:**

பார்வையில் கண்ட கடிதத்தில் கேட்டுள்ளபடி, பாலமேடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளிட்ட தெத்தூர் துணை சுகாதார நிலையம் அரசு கட்டிடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்தச் சுகாதார நிலையத்தில் சுகாதாரச் செவிலியாகத் திருமதி குணசீலி நவநீதம் அவர்கள் 1.12.88 முதல் தம் பணிகளைச் செய்து வருகிறார். அவர் தெத்தூர் நாராயணபுரம், கோவிங்கு பட்டி, கங்காமுத்தூர் ஆகிய 4 கிராமங்களுக்குமாகச் சேர்த்து 4154 மக்கள் தொகைக்குத் தாய்சேய் நல மற்றும் தடுப்பூசிப் பணிகளைச் செய்துவருகிறார். அவர் அந்த ஊரில் தங்கிப் பணி செய்து வருகிறாரா? உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறாரா? என்பது போன்ற விவரங்களை அறிந்து, துணை சுகாதார நிலையத்திலேயேதங்கிதம்பணிதனைச்செய்யசுகாதார செவிலியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு மதுரைத் துணை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**டாக்டர் விஜயராகவன், இயக்குநர்,**
பொது சுகாதாரம் மற்றும்
நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம், சென்னை - 600 006.

# பிரச்சினை

# அறிவியல் துளிகள்

**ப**ச்சைத் தாவரங்களில் மின்சாரம் பாயும்; காரணம் அது ஈரப்பசையுள்ளதாக உயிரோடு இருக்கிறது. ஆனால், உலர்ந்த மலர்ப் பலகையில் மின்சாரம் பாய் வதில்லை; காரணம் அதில் உள்ள ஈரப்பசைக்குக் காரணமான எல்லா செல் களும் இறந்துவிடுகின்றன.

**நா**ம் பூமியிலிருந்து பார்த் தால், மற்றகோள்களெல்லாம் ஒளியுடன் காணப்படுகிற தல்லவா? அதேபோல எந்தக் கோளிலிருந்து பார்த்தாலும் பூமியும் அதேபோல் ஒளிமய மாகத்தான் காணப்படும். இதற்குக் காரணம் பூமியும் சூரிய ஒளியைப் பிரதிபலிப் பதுதான்.

**வி**ண் கற்கள் என்று எரி நட்சத்திரங்கள் குறிப் பிடப்படும்; இவற்றைப் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள்; ஏன் தெரியுமா? அவை அதிக ஒளியுடனிருந்தால் காணும் கண்களின் பார்வை பாதிக்கப்படும். இதனால் பொதுவாக அப்படிச் சொல்லுவது வழக்கம்.

**பூ**த்தாலும் காயா மரமும் உள என்கிறோமே? செம் பருத்தி, போகன் வில்லா போன்ற செடிகள் கூட அவ்வகையைச் சேர்ந்த வைகளேயாகும்; பூக்கும் - ஆனால் காய்க்காது. கால காலமாக இவை விதை யிலா இனப்பெருக்கம் செய்வதே இதற்குக் காரணம் என்கிறார்கள் அறிவியலறிஞர்கள். அதா வது அச்செடிகளின் தண்டை வெட்டியே பல தலைமுறையாகப் பழகிவிட்டதால் மலடாகி விடுமாம் அவை. ஆகவே தான் பூக்கும், ஆனால் காய்க்காது என்கிறார்கள்.

**மூ**ளைக்காய்ச்சல் என்பது குழந்தை பிறந்த சில மணி நேரங்களில், சில நாட்களில், சில வாரங்களில் ஏற்படும்; இதைவிடக் கொடுமை, பிறக்கிற குழந்தைக்கே இருப்பதுமுண்டு என்கிறார்கள். மூளையின் மேலே உள்ள ஜவ்வு அழற்சி காரணமாக Nennigitis தவிர - மூளையின் உட்புறம் ஏற்படும் அழற்சி காரணமாக Encephalitis என்ற இரண்டு வகையான மூளைக் காய்ச்சல்கள் உண்டாகும். பலவகைக்கிருமிகள் காரணமாகவோ அல்லது வைரஸ் காரணமாகவோ கூட இந்நோய் வரக்கூடும்.

**தா**ய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளை விட புட்டிப்பால் குடிக்கிற குழந்தை களுக்கே வயிற்றுப் போக்கு போன்ற நோய் கள் வரும் வாய்ப்பு 14 மடங்கு அதிகமாம்; டில்லியில் மருத்துவ மேதைகள் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

**பூ**மியின் மேல் மண்டல காற்று மண்டல அடுக்கு களில் ஒருவகை நீலநிற ஒளிச் சிதறல்கள் உண்டு; இதனா லேயே வானம் நீல வண்ணமாகக் காணப்படு கிறது. ஆனால் விண் வெளியில் வானம் கறுப் பாகத் தான்இருக்கும்.

## உள்ளாட்சித் தேர்தல்

தமிழ்நாட்டில் வருகிற அக்டோபர் 9, 12 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும். இதுபற்றிய அதிகார பூர்வமான அறிக்கை செப்டம்பர் 3 ஆம் தேதி வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் 384 ஊராட்சி ஒன்றியங்கள், 28 மாவட்டப் பஞ்சாயத்துகள், 634 நகரப் பஞ்சாயத்துகள், 102 நகராட்சிகள், 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. 4.2 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கின்றனர்.

உள்ளாட்சித் தேர்தல் அட்டவணை

| | |
|---|---|
| மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிக்கை வெளியிடுதல் | 3.9.1996 |
| தேர்தல் நடத்தும் அதிகாரி தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல் | 3.9.1996 |
| வேட்புமனு தாக்கல் | 3.9.1996 |
| கடைசி நாள் | 10.9.1996 |
| வேட்புமனு பரிசீலனை | 11.9.1996 |
| வேட்புமனுவைத் திரும்பப்பெற கடைசி நாள் | 13.9.1996 |
| முதற்கட்ட வாக்குப் பதிவு | 9.10.1996 |
| இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு | 12.10.1996 |
| வாக்கு எண்ணிக்கை | 14.10.1996 |
| தேர்தல் முடிவுறும் நாள் | 17.10.1996 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தின் முதல் கூட்டம் உறுதிமொழி எடுத்தல் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் / துணை மேயர் தேர்தல் | 25.10.1996 |

## பாராட்டு விழா

தலைமைச் செயலகச் சங்கம் சார்பில், தலைமைச் செயலக வளாகத்தில் 27.8.'96 அன்று நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார். சங்கத் தலைவர் திரு. முருகேசன் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

## சட்டப் பேரவை

தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் மே மாதம் 22ஆம் தேதி முதல் ஜுன் 1 ஆம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாவது கூட்டத் தொடர் ஜுலை 16ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 31 வரை நடைபெற்றது. மாலையிலும் 2 நாள் நடைபெற்றது.

ஆகமொத்தம் 199 மணி நேரம் நடந்த இக் கூட்டத்தில், எதிர்க்கட்சியினர் மட்டுமே 63 மணி நேரம் பேசியிருக்கின்றனர். அவர்களுக்கு 294 முறையும், ஆளுங்கட்சியினருக்கு 184 முறையும் வாய்ப்பளிக்கப்பட்டது. இக்கூட்டத்தொடரில் 60 மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவு நாளன்று பேசிய சட்டமன்றத் துணைத்தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்- ''ஒன்பதாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்காவது முறையாக முதலமைச்சராகியுள்ள கலைஞர் வீற்றிருக்கும் இப்பேரவையில் நாமெல்லாம் உறுப்பினராக இருப்பது நமக்கெல்லாம் பெருமை'' என்று குறிப்பிட்டார்.

இப்பேரவைக் கூட்டத்திற்கு 61,265 பார்வையாளர்கள் வருகை தந்திருந்தனர்.

# செய்திச் சரம்

## காவிரி நீர் பேச்சுவார்த்தை

காவிரி நதிநீர் பற்றிய இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை 4.9.96 அன்று பெங்களூரில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச். படேலும் இப்பேச்சு வார்த்தையை நடத்தினர்.

அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தை இம்மாத இறுதியில் நடைபெறும்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்த நமது முதல்வர் அவர்கள், ''இரு மாநிலங்களையும் சேர்ந்த விவசாயிகளின் நலன் காப்பதாக, இரண்டு மாநிலங்களின் நல்லெண்ண உணர்வுகளை நீடிப்பதாகவே எங்கள் பேச்சுவார்த்தை நடந்தது. நிச்சயமாக நல்ல தீர்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவே நான் உணர்கிறேன்'' என்றார். அப்போது கர்நாடக முதல்வர் அவர்களும் உடனிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களோடு காவிரி நதிநீர் குறித்த பேச்சுவார்த்தைக்காக மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திரு. ஆலடி அருணா ஆகியோருடன் அரசு உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.


# சென்னைக்கு கிருஷ்ணா நீர்

கிருஷ்ணா நீர் எப்போது வரும் என்று உறுப்பினர்களும், சென்னை நகரத்து மக்களும் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நேரம் இது. இந்தத் திட்டம் 1977-ஆம் ஆண்டு வாக்கில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆந்திரா மாநிலத்தினுடைய முதல்வராக இருந்த அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும் மற்றும் இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டு, அன்று பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி அவர்களுடைய முன்னிலையில் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட திட்டம். அந்த ஒப்பந்தமும் அன்றைக்கு ஆனது.

ஆனால், பல ஆண்டுகள் அந்தத் திட்டம் கிடப்பிலே இருந்து இடையிடையே எழுந்து நடமாடி, வருமா, வராதா என்கிற அளவிற்கு எதிர்பார்த்திருந்த இந்தச் சூழ்நிலையில் கழக ஆட்சி, 1989-90-ல் பொறுப்பேற்ற நேரத்தில் அப்போது ஆந்திராவிலே முதலமைச்சராக இருந்த ராமராவ் அவர்களையும் அதன் பின்னர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இன்றைய தமிழக ஆளுநர் சென்னாரெட்டி அவர்களையும் அடிக்கடி சந்தித்து, அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தியது; தொடர்ந்து சந்திக்க இயலாத ஒரு சூழ்நிலையில், ஆட்சி கலைக்கப்பட்டது; இப்போது முன்பிருந்த ஆட்சி தங்களால் இயன்ற அளவிற்கு முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவு இந்தத் திட்டத்திற்கான வசதிகளைப் பெருக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டாலும்கூட முழுமை பெறாது இருந்த இந்தச் சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழக அரசு ஆந்திர அரசோடு கலந்து பேசியது.

இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்ட நேரத்திலே 15 டி.எம்.சி. என்பதிலே, முதல் கட்டமாக 3 டி.எம்.சி.தான் தர முடியும் என்றும், அப்படி ஒரு ஒப்பந்தத்திற்கு ஏற்கெனவே இருந்த அரசு கையெழுத்துப் போட்டுக் கடிதமே அனுப்பிவிட்ட காரணத்தால், எங்களுக்கு இருந்த சந்தேகத்தின் காரணமாகப் பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் ஐதராபாத்திற்கே செல்ல நேரிட்டு – ஒரு புதிய ஒப்பந்தம் போல, 15 டி.எம்.சி. தருகிறோம். முதல் கட்டமாக 3 டி.எம்.சி. தருகிறோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு அந்த முதல் கட்டமான 3 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களுடைய முயற்சியால் சென்னை மாநகருக்கு வர இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– முதல்வர் கலைஞர்**
***28.8.'96 அன்று சட்டப் பேரவையில் ஆற்றிய உரையிலிருந்து.***





'ரக்ஷா பந்தன்' விழா வினையொட்டி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் கையில் ராஜஸ்தான் சங்கத்தைச் சேர்ந்த சிறுமியர் ராக்கி அணி வித்தனர் (28.8.96).

ஆசிரியர் நாள் விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவினை சென்னை எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டுத் திடலில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார் (3.9.96).



# படமும் செய்தியும்



பெங்களூர் சென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களை, மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு. ஜே.எச். படேல் அவர்கள் அன்புடன் அந்த மாநில முறைப் படி வரவேற்றார்கள் (4.9.96).



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 125-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. எஸ். இராமகிருஷ்ணன், உடன் உள்ளார் (5.9.96).

உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையின்படி, தமிழகத்திற்குக் காவிரிநீரை வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச். படேல் அவர்களும் பெங்களூரில் உள்ள விதான் சௌதாவில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் (4.9.96).





தமிழ்நாடு வர்த்தகக் கழகம் சார்பில் திருச்சியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தமிழ்நாடு வர்த்தகக் கழகத் தலைவர் திரு. ஜே.ஜே.எல். ஞானராஜ் செங்கோல் வழங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோர் அருகில் உள்ளனர் (2.9.96).



# புரியவில்லை

- சாராதோமஸ்

பூர்வாஷ்ட நட்சத்திரம் இப்பொழுதுதான் உதித்திருக்கிறது. தேவகி அம்மாவிற்கு நிலைகொள்ளவில்லை. ஒரே கவலை நாளைய பொழுது விடிவதற்குள் செய்வதற்கு இன்னமும் நூறு காரியங்கள் இருக்கின்றன. உதவி செய்ய காரியஸ்தர் ராமன் நாயரும் வேலைக்காரி சாரதாவும் இருக்கிறார்கள் என்பதென்னவோ உண்மைதான். ஆனாலும், தானே முன் நின்று கவனித் தாக வேண்டுமே. வரப் போகும், பிள்ளைகள், நாட்டுப் பெண்கள், பேரக் குழந்தைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இருக்கக்கூடாதல்லவா! இதுவரையிலும் எந்தக்குறையும் இருக்கும் படியாகத் தான் விட்டதில்லையே!

இன்று காலையில் துபாயிலிருந்து உண்ணி போன் செய்தான். ஓணம் பண்டிகையின்போது என் பிள்ளைகள் எல்லோரும் என்னுடன் இருப்பார்கள் என்று உறுதியாகிவிட்டது. அப்பு, சரளாவும் குழந்தைகளுடனும், கேஷி, பத்மினி தங்கள் குழந்தைகளுடனும் வரப்போகிறார்கள் என்று முன்னரே கடிதம் போட்டிருக்கிறார்கள். உண்ணி வருவதுதான் சந்தேகமாக இருந்தது. அவன் மனைவிக்கு இது மூன்றாம் மாதம். அதனால் டாக்டர் பிரயாணம் செய்யக்கூடாது என்று கூறியிருக்கிறாராம். இதனால்தான் தாங்கள் நிச்சயமாக வருவோம் என்று முன்கூட்டியே அவர்களால் தெரிவிக்க முடியவில்லை. மற்ற இரண்டு பிள்ளைகளும் வரும்போது உண்ணி மட்டுமே வராமலிருப்பது அவளுக்கு என்னவோபோலிருந்தது. நேற்றுவரை அவளது புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு திரிந்த குட்டி மகன் அல்லவா அவன்! அவன் பெரியவனாவது, படித்து, கடல் கடந்து வேலைக்குப் போனது, திருமணம் செய்துகொண்டது எல்லாம் கனவு போலிருக்கிறது. உண்ணி பக்கத்தில் இல்லாவிட்டால் அம்மாவிற்கு ஓணம் பண்டிகையோ, பிறந்தநாளோ கொஞ்சமும் ரசிக்காது என்று பெரிய பையன்கள் இருவரும் சொல் வதுண்டு.



**... அவனுக்கு, இந்த வீடு, இந்த கிராமம், ஓணம் பண்டிகை சித்திரைவிஷு கோவில் உற்சவர்கள் எல்லாமே ரொம்பவும் பிடிக்கும். சின்ன வயதிலும் அப்படித்தான், இன்றும் அப்படித் தான், இருந்தாலும் திருமணம் வரைதான் இதெல்லாம் என்று சொல்லலாம்...**

ஹூம்... கமலா வின் அண்ணன் என்.ஓ.சி. எடுத்துக் கொண்டு வேலைக்காக வெளி நாடு சென்றதில் பிரச்சனை ஒருவாறு தீர்ந்து விட்டது. இனி உண்ணி நிம்மதியாய் வீட்டிற்கு வரலாம். வரப்போகிறான்.

அவனுக்கு, இந்த வீடு, இந்த கிராமம், ஓணம் பண்டிகை சித்திரைவிஷு கோவில் உற்சவர்கள் எல்லாமே ரொம்பவும் பிடிக்கும். சின்ன வயதிலும் அப்படித்தான், இன்றும் அப்படித் தான், இருந்தாலும் திருமணம் வரைதான் இதெல்லாம் என்று சொல்லலாம். இப்பொழுதெல்லாம் வருடத்திற்கொருமுறை ஏதாவதொரு விசேஷ தினத்தன்று வருகிறான். வந்தால் பிறகு என்ன? நண்பர்களுடன் கொண்டாட்டம் தான். அரட்டையும் கேலியும் கிண்டலும், உறங்கிக்கொண்டிருந்த வீடு விழித்துக்கொண்டு விடும். ஒரே கலகலப்புதான்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வழக்கம் சற்று மாறியுள்ளது என்பது தெரிகிறது.

இதற்காக நான் யாரையும் குற்றம் சொல்லப் போவதில்லை. பிள்ளைகளுக்குத் திருமண மாகி குடும்பஸ்தராகிவிட்டார்கள் என்பதை மறந்துவிடக் கூடாதல்லவா! அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும். வயது காலத்தில் என்னைத் தனியாக விட்டு விட்டுப் போக உண்ணிக்கு மனமில்லை.

அவனுடைய வற்புறுத்தலால்தான் நான் அவனுக்கு மனைவியைத் தேடினேன். காசு பணம் ஒரு பெரிய விஷயம் அல்ல. வரப்போகிற மருமகள் எனக்கு உதவியாக, என்னைக் கவனித்துப் பணிவிடைகள் செய்பவளாக இருக்கவேண்டும் என்பதுதான் உண்ணியின் விருப்பமாக இருந்தது. ஆனால், விடுமுறையில் அவன் துபாய் சென்று திரும்பி யதும் மருமகப் பெண் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு விட்டாள். பிறகென்ன? நானே பணம் செலவழித்து, டிக்கட் வாங்கி, அவளை உண்ணியிடம் அனுப்பிவைத்தேன். ஏன் என்றால் என்னால் அவளு டைய துயரம், அலட்சியம், பட்டும் படாததுமான போக்கைப்பார்த்து சகித்துக் கொண்டிருக்க இயலவில்லை. அவள் புறப்பட்டுப்போய் மூன்று வருஷமாகிறது. இதோ, இருவருமாய் இப் பொழுதுதான் முதன் முறை யாக வீட்டிற்கு வரப்போ கிறார்கள்.

மூத்தவன் அப்பு ஐந்து வருடங்களுக்கொருமுறை தான் வருவான். அமெரிக்கா விலிருந்து வந்துபோக அவனுக்கும் குடும்பத்தினருக் கும் நிறைய செலவாகிறது. தன் தம்பிகளிடம் ஐந்து வருடங்களுக்கொருமுறை ஓணம் பண்டிகையின்போது நானும் வருகிறேன். நீங்களும் வாருங்கள். எல்லோரும் ஒன்றாக இருக்கலாம் என்று கூறுவான். ஓணம் பண்டிகை என்பதால் மட்டுமல்ல. சிராவண மாதத்தில் ''கனிஷ்டா'' வில் என் பிறந்த தினம் வருகிறது. சரியாக இன்னும் மூன்று நாட்களுக்குப் பிறகு எனக்கு எழுபது வயதாகி விடும். என நினைத்தவாறே கடந்தகால நினைவுகளில் தேவகி ஆழ்ந்து போவாள்.

அவருடைய அந்த உருவம் கண் முன்னே நிழலாடியது. வீட்டின் வெளிமுற்றத்தில், தோட்டத்தில் எப்பொழுதும் ஏதாவதொரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருப்பதுதான் அவரது இயல்பு. கறுப்பு நிறம்தான். ஆனால் கட்டுமஸ்தான உடல் ''தேவு... தேவு...'' என்று எதற்கெடுத்தாலும் அவளைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார். சின்னச்சின்ன மூன்று குழந்தைகள். ஆனாலும் நான் எதற்கும் தயங்கமாட்டேன். ஒன்றை இடுப்பிலும், ஒன்றைக் கையிலும் பிடித்துக் கொண்டு அவருக்கு உதவி செய்யப் போய்விடுவேன். இருவருமாய் பாடுபட்டு, வியர்வை சிந்தி உழைத்தோம். ஹ்ூம் அது ஒரு காலம்.

ஒரு நாள் வயலிலிருந்து திரும்பியவர் வெட்டுண்ட வாழைமரம் போலல்லவா வாசற்படியில் சாய்ந்துவிட்டார். இந்நிலையி லும் நான் மனம் சோர்ந்து விடவில்லை. அவர் ஒப் படைத்து விட்டுப்போன பிள்ளைகளைத் தவிர இந்த உலகில் எனக்கு யார் இருந் தார்கள்? அவர்களுக்கும் என்னை விட்டால் ஒருவரு மில்லை. பிள்ளைகளை வளர்த்துப் பெரியவர்களாக் கினேன். படிக்க வைத்தேன். பணத்திற்குக் கஷ்டப்படத் தேவையில்லாமல், அவர் சொத்து சேர்த்து வைத்து விட்டுப் போயிருந்தார். அவர் இல்லையே என்ற குறையைத் தவிர வேறெந்தக் குறையும் இருக்கவில்லை.




**... ஒரு நாள் வயலிலிருந்து திரும்பியவர் வெட்டுண்ட வாழை மரம் போலல்லவா வாசற்படியில் சாய்ந்துவிட்டார். இந்நிலையி லும் நான் மனம் சோர்ந்து விட வில்லை. அவர் ஒப்படைத்து விட்டுப்போன பிள்ளைகளைத் தவிர இந்த உலகில் எனக்கு யார் இருந்தார்கள்? ...**

நினைவுகளில் எத்தனை நேரம் கழிந்ததோ, அடடா! நேரமாகிவிட்டதே என நினைத்த வளாய் - ''சாரதா! ஓ! சாரதா!'' என்று உரக்க அழைத்தவண்ணம் நேரா ய்சமையல் அறைக்குச் சென்றேன்.

ஹ்ூம் - அப்புவிற்கும், சரளாவிற்கும் மேல் மாடி அறையைத் தரவேண்டும். அவர்களுக்கு இத்தனைப் பெரிய வீட்டில் அந்த ஒரு அறைதான் பிடிக்கிறது. இங்குதான் கொஞ்சம்

'பிரைவசி' உண்டு. கீழே எல்லோரும் எப்பொழுதும் வந்து போய்க் கொண்டிருப்பார்கள். ரேகா, ரஷிம் இரண்டு பேரையும் என்கூட வைத்துக் கொள்ளப்போகிறேன். வீடு சத்திரம் போலாகிவிட்டது. இதில் தனிமை ஏது? அந்த இரண்டு பேத்திகளுக்கும் என் அறை பிடிப்பதில்லை. பழைய வாசனை வருகிறதாம். போனமுறை வந்திருந்தபோது அந்த இரண்டும் தன் அப்பாவிடம் இங்கிலீஷில் சொன்னது என் காதிலும் விழுந்தது. சரி உங்களுடனேயே மாடி அறையில் இருக்கட்டும் என்று நான் சொன்னதும் அப்பு வேண்டாம் எனக் கூறித் தடுத்துவிட்டான். அமெரிக்காவில் குழந்தைகளை அப்பா, அம்மாவுடன் படுக்க வைத்துக் கொள்ளமாட்டார்களாம்...




அப்புறம் கேசியின் குடும்பம் இருக்கிறது. படிப்பது பற்றியெல்லாம் அவர்கள் விசேஷமாக எதையும் வற்புறுத்துவது இல்லை. பம்பாயில் ஜன சந்தடியும், நெருக்கமும் நிறைந்த இடத்தில் ஒரு பெரிய வீட்டின், நாலாவது மாடியில் இரண்டு அறைகளில் அவர்களின் குடித்தனம் நடக்கிறது. அவர்களுக்குக் கீழேயுள்ள பெரிய ஹாலைக் கொடுத்தாலே போதும்.

உண்ணிக்கென்ன! வராந்தாவில் கிடக்கும் சோபாவே போதும். வந்தால் மட்டுமென்ன! வீட்டில் இருக்க அவனுக்கு நேரமெங்கே இருக்கிறது! பழைய நண்பர்களை சகாக்களைத் தேடிக்கொண்டு போய்விடுவான். கோவில் குளத்தங்கரை, மண்டபம் என அவன் பொழுது கரைந்துவிடும். அவன்வராமல் நான் சாப்பிடுவதில்லை. காத்திருக்கிறேன். என்பதால் நடுநிசிக்குள் கட்டாயம் வீடு வந்து சேர்ந்துவிடுவான்.

தேவகி அறைகளைப் பெருக்கி சுத்தம் செய்து, படுக்கை, தலையணை, விரிப்புகளைத் தட்டி, வெயிலில் போட்டு கட்டில்களில் விரிக்கும்படி சாரதாவிற்கு உத்தரவிட்டாள். எதை எதை எங்கு போட வேண்டும் என்று கூறித் திட்டமிட்டாள். ஒரு வேலையாயிற்று; இனி சாப்பாடு, சமையலைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

பிள்ளைகளின் ருசியே இப்பொழுது மாறிவிட்டது. முன்னைப்போல, உப்பும், புளிப்பும் காரமுமாய் எதுவும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. வெறும் சாம்பார், அதிகம் புளிப்பு இல்லாத காளான், கொஞ்சமாக உப்பும் காரமும் கூடிய ஊறுகாய், இப்படி ஏதாவது சமைத்தாலும் அவர்களுக்கு ரசிப்பதில்லை. மீனும், மாமிசமும் இல்லாமல் ஒரு வேளை சாப்பாடுகூட தொண்டையில் இறங்குவதில்லை. ஆனால் ஓணம்மாதிரி பண்டிகை பருவ நாட்களில் இதெல்லாம் எப்படி... சீச்சீ! பண்டிகையன்று, வழக்கமான சமையல்தான் செய்யப்போகிறேன். இந்தச் சீர் எல்லாம் வேண்டாம். குழந்தைகளுக்கு வெல்லம் என்றால் நிரம்பப் பிடிக்கும். வெல்லப் பாயசம் பண்ணப் போகிறேன்.

'அவர்' காலத்திலிருந்தே இருந்துவரும் கிரமத்தை நான் விடப்போவதில்லை. நம் வயலில் விளைந்த அரிசி, தேங்காய்ப் பாலும் கூட்டி, பக்கத்து மனைக்காரன் அவநாச்சனுடைய சுத்தமான வெல்லத்தைப் போட்டுத்

தான் அவருக்குப் பாயசம் செய்ய வேண்டும். எல்லோரும் ருசித்துச் சாப்பிடுவார்கள். அந்த வெல்லப் பாயசத்தை உறிஞ்சி சாப்பிடுகையில் அவரது முகம் என்னமாய் மலர்ந்துபோகும். திருப்தி தெரியும்! அந்த முகத்தில், ஹூம்... இதையெல்லாம் ஏன் நினைக்கிறேன். நினைக்காமல்தான் இருக்கவேண்டும்.

அப்பு இன்று மத்தியானமே பிளேனில் வந்துவிடுவான். என்றாலும் இன்றைய ராத்திரிப் பொழுது சரளாவின் வீட்டில்தான் கழியும். அமெரிக்காவிலிருந்து கொண்டு வரும் விசேஷமான சாமான்களையெல்லாம் பங்கீடு செய்ய வேண்டாமா? அங்குதான் அதெல்லாம் நடக்கும். அவளுடைய பக்கத்து வீட்டுக்காரி அந்த ரேவதி டீச்சர் முன்பு நம் வீட்டில் குடியிருந்தாளே? அவள்தான் இதையெல்லாம் சொன்னாள். எனக்கு ஓணத்தின்போது வஸ்திரம் கொடுக்க அப்பு மறந்ததேயில்லை. இருந்தாலும் சரளா தன் பிறந்த வீட்டுக்காரர்களுக்கு என்னென்னவோ, விலையுயர்ந்த சாமான்கள் எல்லாம் கொண்டு வந்து தருகிறாள் என்பது காதில் வீழ்ந்ததும் - நமக்கும் ஒரு மகள் இல்லையே என்று தோன்றுகிறது.

சாகும்வரை அவருக்கு, நமக்கொரு பெண் குட்டியில்லையே என்ற குறையுண்டு. அப்பொழுதெல்லாம் எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று பெருமிதப் பட்டுக் கொள்வேன். இப்பொழுது மட்டும் இந்த எண்ணம் ஏன் வருகிறது? மனம்சஞ்சலப்பட்டுப்போய்விட்டதாஎன்ன?

எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து முடிக்க சந்தியா காலம் ஆகிவிட்டது. மாடியிலிருந்து படுக்கை அறையில் பேசிய வாளியில் ஜலம் நிரப்பிக் கொண்டு போய் வைக்கச் சொன்னேன். காலை டிபனுக்கு வீட்டிற்கு வந்து விடுவதாக அப்பு எழுதியிருக்கிறான். அவனும் சரளாவும் குளிக்க, துவைக்க சிரமம் இல்லாமல் இருக்க வேண்டாமா? இதற்குத்தான் குளியல் அறையில் தண்ணீர் நிரப்பச் சொல்லுகிறேன்.

படுக்கப் போகுமுன் தேவகி அம்மாள் ஒருமுறை நின்று நிதானித்து எல்லாம் சரியாக, ஏற்பாடாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத்தான் படுக்கச்சென்றாள்.

சரியாய் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மூன்று பிள்ளைகளும் ஒன்றாக வீட்டில் இருக்கப்போகிறார்கள். நான் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு இங்கே எந்தக் குறையும் நேரக்கூடாது. கூடிக் களிக்கட்டுமே! அந்த ரேவதி டீச்சர் -'' தேவகி அம்மா! உங்கள் மருமகள்மார்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர்கள். புக்ககத்தில் அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. சிரமமோ, கஷ்டமோ கிடையாது. எல்லாம் பார்த்துப் பார்த்துச்செய்து வைக்கிறீர்கள். சுகமாய் இளைப்பாற வேண்டும். அவ்வளவுதானே, ஆனால், தேவகி அம்மா! அவர்களுக்கு இதன் அருமை எங்கே தெரிகிறது! என்னுடைய மாமியார் இருக்கிறாரே! ஒவ்வொரு சனிக்கிழமையும் நான் வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருப்பார். நான் வீட்டிற்குள் காலடி வைத்ததுமே தன் பெண்ணின் வீட்டிற்குப் புறப்பட்டுப் போய்விடுவார். என் புருஷன், தன் அம்மாவிற்கு வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை வேண்டும் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். வாரத்தில் ஐந்து நாட்கள் அவர் பெயருக்குத்தான் சமையல் சாப்பாடு என்று ஏதோ செய்கிறார். குடித்தனம் என்று எதையும் அக்கரையுடன் கவனிப்பதில்லை. வீட்டில் எல்லா வேலையும் அப்படி அப்படியே கிடக்கும். நான் தான் பார்த்துச் செய்ய வேண்டும். ஒரு மூச்சுப்பிடித்துக் காரியத்தில் இறங்கினால், திங்கட்கிழமை இங்கு வந்துதான் அப்பாடா என்று மூச்சு விடுகிறேன்'' என்பாள்.

ரேவதி டீச்சர் சொல்வது சரிதான். நான் இந்த வீட்டில் ஒருநாள் இல்லாவிட்டால் தெரியும். அவர்களுக்கு என் அருமை என்னவென்று இப்பொழுது புரியாது.




**... சரியாய் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மூன்று பிள்ளைகளும் ஒன்றாக வீட்டில் இருக்கப்போகிறார்கள். நான் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு இங்கே எந்தக் குறையும் நேரக் கூடாது. கூடிக் களிக்கட்டுமே!**

'நானில்லாவிட்டால் இந்தப் பிள்ளைகளும், மருமகள்மாரும் என்னதான் செய்வார்களோ! ஈசுவரா!' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனத்திற்குள் மாய்ந்தவாறே தேவகி புரண்டு படுத்தாள். உறக்கமே வரவில்லை. கண்ணயர்ந்தபோது விடிவேளை நெருங்கி விட்டது. அப்பொழுதுதான் அவள் ஒரு விசித்திரமான கனவு கண்டாள்.

விடிந்துகொண்டிருக்கும் வேளை, இன்று ராமன் நாயர் சீக்கிரமாகவே வந்துவிட்டான். அவன் பின்னாலேயே சாரதாவும் வந்தாகி விட்டது. பிள்ளைகள் வரப்போகிறார்களே என்று இருவருமே சீக்கிரம் வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. நேற்று நானே - 'காலையில் சீக்கிரம் வந்துவிடுங்கள்' என்றுகூறியிருந்தேன். தினம்போல்வராந்தா கதவைத் தட்டாமல் ராமன்நாயர் சாவியால் கதவைத் திறக்க முயற்சிக்கிறான் அவனுக்கென்ன வந்து விட்டது? திமிரா? கதவைத் திறக்கிறானே! அவன் மட்டுமல்ல அந்த சாரதாவும்கூட இருக்கிறாள்.

இதென்ன? நானும் அல்லவா வெளியே நிற்கிறேன். நான் வீட்டில் இல்லையா? இந்த ஐம்பது வருஷங்களில் இப்படி ஒருநாள் கூட நடந்தது இல்லையே! எங்கே போனாலும் இரவுக்குள் வீட்டிற்குத் திரும்பிவிடுவேன். திரும்பி வந்துவிட வேண்டும் என்பது அவருடைய நியமம். அதாவது விருப்பம். அவர் இறந்த பிறகுதான் இந்த நியமத்தை மீறுவதில்லை. இப்பொழுது இது எப்படி நேர்ந்தது? என்னை சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார்களா? ஐயோ! இதென்ன? நான் எப்படி, இப்படி வெளியே நிற்கிறேன். ஐயோ! என் நாடி நரம்பெல்லாம் தளர்ந்துவிட்டது. முதலில் வியப்பாக இருந்தது. கவலையாக மாறி விட்டது. ராமன்நாயர்கதவைத்திறந்ததும் நான் அவனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றேன்.

ராமன்நாயர் சாரதாவிற்கு ஏதேதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் வடக்குத் திக்கைப் பார்த்து ''சாரதா! இதோ பார்! முதலில் அம்மாவின் திண்ணையை அலம்பி அங்கு விளக்கு ஏற்றிவை. மற்ற வேலைகளையெல்லாம் பிறகு பார்க்கலாம்'' என்றான். என்ன இது! அம்மாவின் திண்ணை



யையா? அப்பொழுதுதான் நான் இறந்து விட்டேன் என்பது புரிந்தது. பகவானே பிள்ளைகள் வந்தால் அவர்களை யார் கவனிப்பார்கள்! அவர்களுக்கு வேண்டியதை யெல்லாம் யார் செய்வார்கள்? நான்தான் உயிரோடு இல்லையே! என்னால் என்ன செய்ய முடியும்? இந்த சாரதா ஏன் கல்லுபோல் அசையாமல் நிற்கிறாள். என்ன வந்துவிட்டது இவளுக்கு? ராமன்நாயர் சொன்னது இவள் காதில் விழவில்லையா என்ன? ராமன்நாயர் கேட்டான் - அடியே சாரதா! ஏனிப்படி மரம்மாதிரி நிற்கிறாய்?

சாரதா உதட்டைச் சுழித்துக்கொண்டு முணுமுணுத்தாள் – ''ஹ்ூம், விளக்கு ஏற்றுகிறேன். அந்தக் கிழவி இருந்தவரையில் என்னை மூச்சு விடக்கூட மாட்டாள். விரட்டிக் கொண்டே இருப்பாள். ஒவ்வொரு காசாக, சேர்த்துச் சேர்த்துப் போன வருஷம் ஓணம் பண்டிகைக்கு, காலுக்குக் கொலுசு வாங்கிப் போட்டுக்கொண்டேன். ஒருநாள்கூட கொலுசு போட்டுக்கொண்டு என்னை இங்கே நடமாட விடவில்லை. அந்தக் கிழவி. வேலைக் காரியெல்லாம் கொலுசு போட்டுக்கொண்டு இங்கே வேலை செய்யக் கூடாதாம்.''

ஹ்ூம் - என்ன நன்றிகெட்டதனம் இந்த வேலைக்காரர்களுக்கு! கொலுசுக்குப் பணம் போதவில்லை என்றதும் நான்தானேசுளையாக முப்பது ரூபாய் தூக்கிக் கொடுத்தேன்? இன்றுவரை அதைத் திருப்பிக் கொடுக்கும் பேச்சையே காணோம். அந்தச் சிறுக்கி வீட்டிற்குள் கொலுசு போட்டுக் கொண்டு நடமாடக்கூடாதென்று கண்டிப்பாகச் சொன் னேன். காரணம் தெரியுமா? காலையில் பால்

கறக்க வரும் மாட்டுக்காரனிலிருந்து மாலையில் தென்னையிலிருந்து கள் இறக்க வரும் – மரமேறிவரை எல்லோரிடமும், சீண்டலும் சிங்காரமுமாய் இருப்பாள் அந்தச் சிறுக்கி. இதுமட்டுமா? உண்ணி வயசுபிள்ளையும் வீட்டில் இருப்பான்.

பெண்களைப் பற்றிய உண்ணியின் பலவீனமும் எனக்குத் தெரிந்துதானே! அவன் மீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும் அல்லவா? ஹூம்.. இந்த வேலைக்காரிகளிடம் நன்றியையும் அன்பையும் எதிர்பார்ப்பது அதுவும் இந்தக் காலத்தில்... வீண்தான் என்று அப்பு அடிக்கடி சொல்லுவானே!

அந்த ராமன் நாயர் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொல்லுகிறான் – ''அடி முட்டாள் பெண்ணே! அதெல்லாம் கடந்து போன விஷயம். இனி இந்தக் கிழவியின் பிள்ளைகளை அல்லவா நாம் சந்தோஷப் படுத்தவேண்டும். அப்பத்தான் அவர்கள் போகும்போது, பத்து ஐம்பது சந்தோஷமாய்க் கொடுத்துவிட்டுப் போவார்கள். கிழவி இருந்தால் கொடுக்கவிட மாட்டாள். நல்லவேளைசனிஒழிந்தது!''



ஐயோ - என்ன இது? ராமன் நாயரா இப்படிப் பேசுகிறான்! என்பால் இத்தனை வெறுப்புடன், எவ்வளவு இகழ்ச்சியாகப் பேசுகிறான்! நான் அவனைச் சம்பளத்திற்கு வைத்திருக்கும் வேலைக்காரன்போல் ஒருக்காலும் நடத்தியதேயில்லையே! அவனது மூன்று பெண்களின் கல்யாணத்தின் போதும், அவன் புது வீடு கட்டிய போதும் நான் எவ்வளவு தாராளமாய் என் கையைவிட்டுப் பணம் செலவழித்தேன் என்பதையெல்லாம் மறந்துவிட்டானா... என் மனம் வெதும்பியது. இந்த இராமன் நாயர் கூறுவதிலும் உண்மை இல்லாமைலில்லை; என் பிள்ளைகள் வீண்செலவு செய்வதைத் தடுப்பது என் கடமையல்லவா? ராமன் நாயருக்கு இதைப் புரிந்து கொள்ளப் புத்தி இல்லையா என்ன? நான் இல்லாமல் போவது தனது அதிர்ஷ்டம் என்பதுபோல் பேசுகிறானே!

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம். என் சமாதி - அதுதான் திண்ணையை அலம்பி விட்டுவிட்டு சாரதா வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றுப் பக்கம் ஓடுகிறாள்.

என்ன இது? வெளிவராந்தாவில் தண்ணீர் வைக்கவில்லையா? வெகுதூரப் பயணம் செய்துவிட்டு வருகிறார்கள். கை கால் கழுவிக் கொண்டுதானே உள்ளே வரவேண்டும். இந்த சாரதாவிற்கு இது தெரியவேண்டாமா! புத்தி மட்டு அவளுக்கு.

நான் வராந்தாவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். மௌனமாய்தான் பின்னால் பெட்டி படுக்கைகளோடு இராமன் நாயர் நிற்கிறான். இரண்டுநாள் பயணத்தின் களைப்பும், அழுக்கும், குழந்தை நிறம் மங்கித் தெரிகிறார்கள்.

வீட்டு வாசலுக்கு வந்தபின் கேசி கண நேரம் மௌனமாய் நிற்கிறாள். கண்களில் துக்கத்தின் சாயலா? என் நினைவினாலோ? பாவம் கேசி! எனது மறைவு அவனுக்குத் துக்கத்தைத் தந்திருக்கும். அடுத்த கணம் பத்மினியின் ஏளனம் நிறைந்த குரல். தன் காலில் தண்ணீர் விடும் சாரதாவை நோக்கி ''நீ போ அந்தப்பக்கம்! இனி செருப்பை அவிழ்த்துவிட்டு யார் காலை அலம்பிக் கொள்ளப் போகிறார்கள்? யாருக்குப் பயப்படணும்? இனி இந்த வீட்டில் என் சௌகரியப்படி இருக்கலாம்.''

மருமகள் தனக்கு இனி முழு நிம்மதியும் சுதந்திரமும் கிடைத்துவிட்டதை உணர்த்து கிறாள் போலும், அப்படியென்றால் நான் உயிருடன் இருந்தது அவளுக்குத் தடையாக, உறுத்தலாக இருந்ததோ! என் மகன் கேசி. அவள் பேசுவதைக் கேட்ட பின்னும் பேசாமலிருக் கிறானே! மறுத்து ஏதும் சொல்லமாட்டானோ! அவனும் அவளுடன் சேர்ந்தல்லவா சிரிக் கிறான். வெளியேயுள்ள அழுக்கும், அசுத்தமும் கூடிய செருப்பை அப்படியே சுத்தமான வீட்டிற்குள் போட்டுக்கொண்டுவருவது சரியல்ல, வரக்கூடாது என்ற அளவுக்குப் புரிந்து கொள்ளும் புத்தி கிடையாதா? இன்றுவரை இவர்களுடைய சுகம் சந்தோஷத்தைப் பற்றித்தான் என் எண்ணம், செய்கை, கவலையெல்லாம் இருந்தது.. இனி! மனம் பாரமாய் கனத்தது. அவர்களுடன் கூட வீட்டில் நுழைய, காலடி எடுத்து வைக்க மனம் வரவில்லை.

எல்லாம் அவர்கள் இஷ்டம்போல் இருக் கட்டும், செய்யட்டும் எனக்கென்ன?

என் மகன் கேசி, தன் மனைவியிடம் ஏதோ கிசுகிசுக்கிறானே! எனக்குத் தெளிவாகக் கேட்க வில்லை - சொல்லுகிறான் - ''நீ சாரதாவிடம் சொல்லு, அப்பாவின் அறையை நமக்காகத் திறந்துவிடச் சொல்லு, பம்பாயில் இரண்டு அறைக்குள் குழந்தை குட்டிகளுடன் என்ன தாம்பத்திய சுகம்! இங்கு வந்தாலும் அதே கதிதான். நமக்கென்று அறையில்லை... இந்தத் தடவையாவது கொஞ்சம் 'பிரைவசி'யை ... தனிமையின் ஆனந்தத்தை அனுபவிப்போமே!''

என்ன இது! என் பிள்ளையா! என் கேசியா பேசுகிறான்! அவன் மனத்திற்குள் இத்தனை சுயநலமா ஒளிந்துகொண்டிருந்தது... ஆனால் ஒருவிதத்தில் அவன் சொல்வதிலும் உண்மை யிருக்கிறது. எத்தனையோ வருடங்களுக்கு ஒருமுறை அவன் வீட்டிற்கு வருகிறான். அவனுக்குக் கிடைக்காத இந்த சௌகரி யத்தை, அவன் விரும்பும் வசதியை நான் செய்து கொடுத்திருக்க முடியும். கொடுத் திருக்கலாம். இருந்தாலும், நான் போய் விட்டேனே என்று வருத்தப்படுவதற்குப் பதிலாக, என் பிள்ளை.. இதற்குமேல் அவர்கள் பேசுவது எதுவும் காதில் விழ வில்லை. காதை மூடிக்கொண்டு வராந்தா சுவற்றில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து விட்டேன்.



எத்தனை நேரம் இப்படி உட்கார்ந் திருந்தேனோ தெரியவில்லை.

வாசலில் இன்னொரு கார் வந்து நிற்கிறது. அப்புதான் வந்திருக்கிறான். பாண்ட், ஷர்ட் அணிந்த இன்னும் மூன்று பேர் அவனுட னிருந்தனர். அப்படியென்றால், சரளா, இந்து, பிந்து வரவில்லையா? நான் இல்லை என்பதாலா?

சாப்பிடும்போது அவர்கள் கீழே இறங்கி வருவார்கள். நான் இல்லையே.. சாப்பாடு யார் பரிமாறி கவனித்துக் கொள்வார்கள்? சிரமமாக இருக்குமல்லவா' அதனால்தான்.. இல்லை... அப்புவுடன் வந்திருப்பவர்களை இராமன் தாயாருக்குத் தெரியும் போலிருக்கிறது. அவர் களுக்குள் குசலம் விசாரித்துக் கொள்கிறார்கள். சிரிக்கிறார்கள். கேசியும், பத்மினியும் படியிறங்கிச் சென்று அவர்களை வரவேற் கிறார்கள். இன்னமும் அவர்கள் யார் என்பது புரியவில்லையே! யாராக இருக்கும்! பத்மினி உரக்கச் சிரித்துக்கொண்டே ''மதனி, குழந்தை களின் டிரஸ் பிரமாதம்! அம்மா உயிரோடு இருந்தால் உங்களையெல்லாம் அடையாளம் தெரிந்து கொள்ளச் சிரமப்பட்டிருப்பார். மதனியார், பேத்திகள் யாரென்று அவருக்குத் தெரிந்திராது'' என்றாள்.

இதென்ன இது! அப்புவுடன், பாண்ட் போட்டுக்கொண்டு, தலை மயிரைக் கழுத்தளவு வெட்டிக்கொண்டு வந்திருப்பவர்கள் சரளா வும், இந்தும், பிந்துவுமா? பகவானே! என்னைத் தாண்டிக்கொண்டு செல்லும் சரளா, பத்மினியிடம் தாழ்ந்த குரலில் ''இந்த டிரஸ் எவ்வளவு வசதியாய், சௌகரியமாய் இருக் கிறது தெரியுமா? அங்கெல்லாம் இந்த மாதிரி டிரஸ் போட்டுக்கொண்டு பழக்கமாகிவிட்டது. இதுவரை இங்கு வரும்போது வேஷத்தை மாற்றிக்கொண்டு விடு வோம். வருவதற்கு 6 மாதம் முன்னே தலைமயிரை வெட்டிக்கொள்ள மாட்டோம். தலை மயிரை வளர்த்திக் கொண்டு விடுவேன். புடவை கட்டுவேன். இங்கு வரும்போது பாரதீய பெண்மணியாக வராவிட்டால் அம்மா கோபித்துக்கொள்வார். கடுமையாக நாலு வார்த்தை சொல்லுவார். போனமுறை நான் நைட்டி, போட்டுக் கொண்டதற்குத்தான் எத்தனை எதிர்ப்பு? கேசி, உண்ணியின் எதிரே நான் சற்றும் வெட்கமில்லாமல் திரிந்தேன் என்று கடித்துகொண்டார். அப்பொழுதே நான் அப்புவிடம் ''இனிமேல் அம்மா இறந்த பிறகுதான் இனி நான் இந்தியா வருவேன்'' என்று சொல்லிவிட்டேன். என் பிறந்தவீட்டில் இப்படி அம்மா.. அம்மா என்று மாய்ந்து போகும் வழக்கமெல்லாம் கிடையாது.. இந்த அப்புவின் போக்கெல்லாம் ரொம்பப் பழங் காலம். அதனால்தான்.... பத்மினி இந்தமுறை எதற்காக வந்திருக்கிறோம் தெரியுமா? பாகப் பிரிவினைக்குத்தான்.''

இதற்குமேல் கேட்டுக்கொண்டிருக்க என் னால் இயலவில்லை. இரண்டு பெண்களுக்கு அம்மாவாக இருக்கும் சரளாவா இப்படிப் பேசுகிறாள். அவளால் எப்படி இப்படி

யெல்லாம் பேசமுடிகிறது? நாளைக்குத் தனக்கும் இம்மாதிரி நிலை ஏற்படும் என்று யோசித்துப் பார்க்கவில்லையா அவள்?

நைட்டி என்ற பெயரில் உள்ளாடையெல்லாம் தெரியும்படியான மெல்லிய உடையை அணிந்துகொண்டு அவள் காப்பி சாப்பிடக் கீழே வந்ததும் உண்மையிலேயே அதிர்ந்து போன நான் அவளைக் கண்டித்தேன். அப்பொழுது உண்ணிக்குத் திருமணமாகி இருக்கவில்லை. கட்டை பிரம்மச்சாரி அவன். கேசியும் தனியாகத்தான் வந்திருந்தான். மனைவியைக் கூட்டி வரவில்லை. மைத்துனர்களுக்கு தாய்க்குச் சமமான ஸ்தானத்தில் இருப்பவள் இப்படி ஆடை அணிந்து சங்கோஜமில்லாமல் வருவது சரியா?... என்று அவள் உடனே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு மேலே போய்விட்டாள். ஆனால் நான் உயிரோடு இருக்கும்வரை மீண்டும் இந்த வீட்டிற்கு வரமாட்டேன் என்று அவள் இப்படி கடுமையான தொரு முடிவை எடுத்திருப்பாள் என்று நான் நினைத்துப் பார்த்ததில்லை. அப்படியென்றால் எனது மரணம் அவளுக்கொரு வெற்றி, அவளுடைய பிரதிக்ஞை வென்றுவிட்டது. ஹூம்... கொஞ்சமும் பாசமோ, அன்போ இல்லாத மருமக்கள்மார்களிடமிருந்து சீக்கிரமே விலகி' தூரப்போய்விட வேண்டும்.



என் பேரன் பேத்தி இருக்கிறார்களே அவர்கள் உடம்பில் ஓடுவது என் ரத்தம்தானே! அவர்களுடன் என் அறையில் இருந்து கொள்கிறேன்.

ரேகாவும், ரஷ்மும் மிகுந்த உற்சாகத்துடன் அறையைச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர். இரண்டு பேருமே ரொம்ப சந்தோஷமாக இருந்தனர். அவர்களது இங்கிலீஷ் பேச்சும், சிரிப்பும் புரியாவிட்டாலும் அவர்களை கண்நிறையப் பார்த்துக்கொண்டிருப்பதே சந்தோஷமாக இருந்தது. பெரியவருக்குப் பதினாலு வயதாகிறது. ஒருவரும் அவளைச் சின்னப் பெண் என்றுகூற முடியாது. நல்ல வளர்த்தி, உற்றுப்பார்த்தால்... 'அவரைத்' தன் தாத்தாவைக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றும். அகன்ற நெற்றி, கூர்மையான மூக்கு, தடிமனான உதடுகள், எல்லாம் அப்படியே அச்சு, அவள் உரக்கச் சிரித்தால் வலது பக்கத்துப் பற்கள் தெரியும். அதுகூட அவரைப்போலவேதான். எனக்குப் புல்லரித்தது. தூறலில் நனைவது போன்ற இனிமை.

அவர்களுக்குப் பால் கொடுக்கச் சாரதா வந்ததும் கொச்சை மலையாளத்தில் அவளுடன் அவர்கள் பேசியதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர்கள் இருவருக்கும் மட்டும் அந்த அறை கிடைத்ததில் அவர்களுக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியாம். நல்லவேளை பாட்டியில்லை; என்னுடைய எண்ணெய்வாசனை, குறட்டை, இருமல்... அவர்களால் கொஞ்சம்கூட சகித்துக்கொள்ள முடியவில்லையாம்.

இனி இங்கே இருக்கக்கூடாது. என் பேத்திமார்களுக்குக்கூட நான் இருப்பதில் மகிழ்ச்சி இல்லை. கனத்த உள்ளத்துடன் வெளியேறினேன்.

முற்றத்தில் அப்புவும் இராமன் நாயரும் நின்றுகொண்டிருந்தனர். ராமன் நாயர் கொணர்ந்திருந்த சோடா பாட்டிலை அப்பு தன் கையில் வாங்கிக் கொண்டான். இராமன் நாயர் சிரித்துக் கொண்டே ''சாரே இனி நீங்கள் பட்டறையிலேயே தாராளமாய் குடிக்கலாம். நான் என் வீட்டிலே கோழி சமைத்துக் கொண்டு வருகிறேன். இனிஅம்மா பார்த்து விடுவாளே என்ற தொந்தரவெல்லாம் இல்லை...'' என்றான்.

அப்புவும் இதைக் கேட்டுச் சிரிக்கிறான். ''இராமான்நாயர் நீ சொன்ன பிறகுதான் இது நினைவு வருகிறது. சாப்பாடு பரிமாறச் சொல்லு. நான் மேலே போய் பாட்டிலை எடுத்து வருகிறேன். இது ரொம்ப நல்லதாகப் போயிற்று.''

நான் வியப்பினால் கல்லாயச் சமைந்து போனேன். ''இது ரொம்ப நல்லதாகப் போயிற்று!'' எது? எனக்கு ஏதும் புரியவில்லை. நான் இறந்து போனதா? அல்லது பகல் சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் காண அமர்ந்து விஸ்கி குடிப்பதா? எது ரொம்ப நல்லதாகப் போயிற்று?''

அதிகமாக யோசிக்க என்னால் இயலவில்லை. மெதுவாக அடி எடுத்து வைத்து

வராந்தாவிற்கு மீண்டும் வந்தேன். சுவற்றில் சாய்ந்தவாறு அமர்ந்து என்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டேன். இனி உண்ணி வர வேண்டியது ஒன்றுதான் பாக்கி. இன்று அவன் கட்டாயம் வந்துவிடுவான். அவனையும் ஒருமுறை கண்ணாரப் பார்த்துவிட்டு...

ஆனால் உண்ணிக்குப் பதிலாக தபால் காரன்தான் வந்தான். இராமன் நாயர் கடிதத்தை வாங்கிக்கொண்டு உள்ளே வந்ததும், அது உண்ணியின் கடிதமாகத்தானிருக்கும் என்று நினைத்தேன. என்ன எழுதியிருக்கிறானோ என்று தெரிந்து கொள்ள ஒரே ஆவலாக இருந்தது. என்னவாக இருக்கும்! இந்த முறையும் கமலா நோய்ப்படுக்கையில் படுத்து விட்டாளா? என்ன உடம்போ! குழந்தை வேண்டும் என்று அவளுக்குத்தான் பாவம் எத்தனை ஆசை! எத்தனை வேண்டுகோள். பிரார்த்தனைகள் செய்துகொண்டிருக்கிறாள்.

உரக்கச் சிரிக்கும் சத்தம். அப்படியென்ன சிரித்துக் களிக்க அவன் எழுதியிருக்கிறான்! குழந்தைகள் பேசிக்கொள்வது காதில் வீழ்ந்தது.... இதென்ன! கமலா மூன்று மாதம் கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற செய்தி பொய்யாம். இங்கு வந்தால் அம்மா தன் கூட கொஞ்ச நாட்கள் இருக்கும்படி கூறுவாளாம். இதிலிருந்து தப்பிக்கத்தான் உண்ணி அப்படி எழுதினானாம். இந்தத் தடவை ஊருக்கு வந்து வீட்டில் போர் அடித்துக் கொண்டிருப்பதைவிட அவர்கள் ஐரோப்பாவிற்குச் சுற்றுலா போகிறார்களாம். ஹூம் அம்மாவிற்கு இது எத்தகைய ஏமாற்றத்தை அளிக்கும். எத்தனை நிராசை அடைவாள்! என்ற குற்ற உணர்வுகூட அவர்களுக்குத் தோன்றவில்லையே!

மனத்தில் விரக்தி மெல்ல மெல்லப் பரவியது. உண்ணிக்கு மட்டுமென்ன மற்ற எவருக்குமே குற்ற உணர்வு தோன்றாமல் இருக்கட்டும். இனி இந்த வீட்டிலிருந்து எனக்கு, முற்றிலும் அன்னியமாகப் போய்விட்ட இந்த வீட்டிலிருந்து பற்றுக்கள், கவலைகள் ஏதுமின்றி நிர்விகாரமான மனத்துடன் நான் போய்விடுவேன்.

நான் எங்கே போய்விட்டேன்! எனக்கு எதுவுமே புரியவில்லை. நான் கண் விழித்தபோது பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது. இருந்தாலும் நான் பரபரப் படையவில்லை. ஐந்து வருடங்களுக்கொரு முறை எந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருக் கிறேனோ அன்றைய தினத்தின் முக்கியத்து வத்தை நினைத்தோ, செய்ய வேண்டியிருந்த நூறு காரியங்களைப் பற்றியோ பரபரப் படையாமல் மனம் சோர்ந்து போனவளாய் படுத்திருந்தேன். மிகவும் அசதியாக இருந்தது.

இந்த வீட்டிற்கு நான் இன்றியமையாத வளா? அல்லது வேண்டப்படாத, தேவை யில்லாத ஒருத்தியா?

புரியவில்லை!

*நன்றி : வானதி பதிப்பகம், வெளியிட்ட 'இந்திய பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்' என்ற நூலிலிருந்து...*
*ஸ்ரீமதி சாராதோமஸ் அவர்களின் மலையாள சிறுகதை, தமிழாக்கம் சரஸ்வதி ராம்நாத்*

**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை :**

மாண்புமிகு இந்தியப்பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் சென்னை வந்தபோது விமானநிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார் (24.8.96).

**இரண்டாம் அட்டை:**

சென்னை மாநகரில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார் (28.9.96).

**நான்காம் அட்டை :**

**தந்தை பெரியார் (தோற்றம்: 17.9.1879 - மறைவு: 24.12.1973) அறிஞர் அண்ணா (தோற்றம்: 15.9.1909 - மறைவு: 2.2.1969) நினைவாக.**

மருத்துவக் கட்டுரை

# தோல் நோய்கள்

டாக்டர் ஜி. இளங்கோவன்

மனிதனுக்கும் சரி, விலங்கினத்திற்கும் சரி; நல்ல தோற்றத்தையும் பொலிவையும் தருவது தோல் ஆகும். ஐம்புலன்களில் முதன்மையானதும், தோல் ஆகும். ஏனைய உறுப்புகளான வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றுக்குத் தனி வடிவம் இருப்பதுபோல், தோலுக்கெனத் தனிவடிவம் இல்லாததால்தான் அதனை ஒரு உறுப்பாக எண்ணிப்பார்க்க யாருக்கும் தோன்று வதில்லை. எனினும், ஏனைய நான்கு புலன்களையும் ஒன்றாக இணைத்து, உடலெங்கும் ஒரு போர்வை போல வியாபித் திருக்கும் பெரிய உறுப்பு தோல் ஆகும். இரத்த மண்டலம், தசை மண்டலம், நரம்பு மண்டலம், எலும்பு மண்டலம் போலத் தோலும் ஒரு முக்கிய மண்டலமாகப் பணியாற்றுகிறது. முக்கியமாக மற்றவர் மனதில் எளிதில் இடம் பிடிக்கும் இனக்கவர்ச்சி சாதனம் தோல்தான்.

**தோலின் முக்கியப் பணிகள்**

அழகையும் ஆரோக்கியத்தையும் கொடுக் கும் தோல், உடலில் பாக்டீரியாக்களோ, நோய்க்கிருமிகளோ எளிதில் புகாதபடி பாதுகாப்பு அளிக்கிறது.

சுற்றியுள்ள காற்று, வெப்பமாக இருக்கும் போது உடல் வியர்த்து, குளிர்ச்சியடையவும், சுற்றிலுமுள்ள காற்று குளிராக இருக்கும் போது உடல் நடுங்கி, வெப்பத்தைத் தேடிக்கொள்ளவும் இப்படி உடல் வெப்பத்தை ஒரே சீராக வைத்துக்கொள்ள இயற்கையிலேயே படைக்கப்பட்ட ஒரே சாதனம் தோல்தான்.

வலி, அழுத்தம், மென்மை, வெயில், குளிர் போன்றவற்றைத் தொட்டு உணரும், நரம்பு மண்டலத்தின் அனைத்துப் பணிகளுக்கும் அவைகளின் உணர்ச்சியை வெளிப்படுத்தவு மான தொடு உணர்வுள்ள உறுப்பு தோல் மட்டுமே.


வெப்ப நாடுகளில் உள்ளவர்கள் வெயி லைத்தாங்கிக்கொள்வதற்கு வசதியாகக் கருப்பு நிறமாகவும், குளிர் நாடுகளில் உள்ளோர் உடல் வெப்பத்திற்குத் தேவையான, சூரியனின் புற ஊதாக் கதிர்களின் துணையோடு டி. வைட்டமின் தயாரிப்பதற்கு ஏதுவாக வெள்ளை நிறமும், மிதவெப்ப நாடுகளில் உள்ளோர் சீரான வெப்பத்தைப் பெறுவதற் காகக் கருப்புமில்லாமல், வெள்ளையு மில்லாமல் ஒருவிதப் பழுப்பு நிறமாகவும் ஆக, வெவ்வேறு நிறங்களில் தோற்றம் தருவது தோல் ஆகும்.

நீரிலே நீண்ட நேரம் இருந்தாலும், நீர் புகாத தன்மை கொண்டது தோல் ஆகும்.

தினசரி சராசரியாக 1/2 லிட்டர் நீரையாவது வெளியேற்றும் நீராவிப்போக்கு எந்திரமாகப் பணிபுரிவது தோலாகும்.

சராசரி மனிதனின் தோலின் மொத்த எடை 4 1/2 கிலோ ஆகும். தோலில் 100 வியர்வைச் சுரப்பிகள் 4 மீட்டர் நரம்புகள், 10 மயிர்க்கால்கள், 15 எண்ணெய் சுரப்பிகள் 1 மீட்டர் இரத்தக் குழாய்கள் ஆகியவை உள்ளன என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய அதிசயப் பணியாற்றும் தோலைப் பற்றியும் அதன் பாதுகாப்பு பற்றியும், அதனைப் பற்றக்கூடிய நோய்கள் பற்றியும், அவற்றுக்கான சிகிச்சை முறை



யையும் நாம் அறிந்தால்தான் நமக்கு அழகுடல் அமையப் பெறும்.

**தோல் நோய்கள்:**

பொதுவாகத் தோலானது உடலுக்கு வெளியிலிருந்தும் தாக்கப்படலாம். உடலுக்கு உள்ளிருந்தும் தாக்கப்படலாம். இதனால் பலவிதமான தோல்நோய்கள் ஏற்படுகின்றன. ஏறக்குறைய 1500க்கும் மேற்பட்ட தோல் நோய்கள் உள்ளதாக அறிவியலார் கண்டறிந்துள்ளனர். இவற்றுள்ளும் சுமார் 25க்கும் கீழ் உள்ள தோல் நோய்களே தொற்றும் தன்மையுடையன.

மனிதர்களை அதிகம் தாக்கும் தோல் நோய்களின் விவரம் வருமாறு:

1. பாக்டீரியாவின் மூலம் பரவும் நோய்
2. வைரஸ் (Virus) மூலம் பரவும் வியாதி
3. காளான்(Fungus) மூலம் பரவும் வியாதி
4. எல்லாவிதமான கரப்பான் நோய் ஒட்டு கரப்பான் (Eczemes)
5. சோரியாசிஸ் (Psoriasis)
6. சொறி சிரங்கு (Scabies)
7. முகப்பரு (Acne)
8. தலைமுடி உதிர்தல்
9. நிறமாற்றம் (Pigmentary disorders)

**உணவுச் சத்துக் குறைவினால் ஏற்படும் தோல் நோய்கள்:**

சத்தான உணவை உட்கொள்ளவில்லையென்றால், வைட்டமின்கள் பற்றாக்குறையினாலும் பின்கண்ட தோல் நோய்கள் ஏற்படும்:

1. பெல்லக்ரா
2. புரதச் சத்துக் குறைவு நோய்
3. ஸ்கர்வி
4. தோல் நிற மாற்றங்கள்
5. வாய்ப்புண்
6. தவளைச் சொறி
7. மீன் தோல் நோய்

**தோல் வியாதியைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள்:**


1. உட்ஸ் லேம்ப் (Woods Lamp) - இதன் மூலம் தலையில் பூஞ்சைக்காளான் மற்றும் போர்பைரியா (Porphyria) வியாதிகளைக் கண்டு பிடிக்கலாம்.
2. வைரஸ் பரிசோதனை (Virological Examination).
3. பாக்டீரியா பரிசோதனை (Bacteriological Examination).
4. இரத்தப் பரிசோதனை (VDRL).
5. காளான் பரிசோதனை (Scrapping for fungus).
6. தோல் பரிசோதனை (Skin Biopsy).
7. எச். ஐ. வி. பரிசோதனை (HIV Test).
8. அலர்ஜி தோல் பரிசோதனை
9. பேட்ச் பரிசோதனை (Patch Test).
10. இம்மூனோ ப்ளோரசன்ஸ் பரிசோதனை.

**வைரஸ்களினால் ஏற்படும் தோல் நோய்கள்**

நஞ்சு என்று பொருள் தரக்கூடிய வைரஸ் பாக்டீரியாவை விட, தோற்றத்தில் மிக மிகச் சிறியது; ஆனால், ஏற்படுத்தும் விளைவுகளில் மிகமிகக் கொடியது. ஒரு மைக்ரான் அளவுள்ள இது ஒரு சதுர மில்லி மீட்டரில் பத்து லட்சம் வைரஸ்கள்வரை கூடியிருக்கும். இதனை ஒரு மின்னணு நுண்ணோக்கியின் மூலம்தான் பார்க்க முடியும். வைரஸ்களுக்குத் தனியாக செல் அமைப்புக் கிடையாது. எனவே வைரஸ் உயிரிதான் வாழவும் சரி, இனப்பெருக்கம் செய்யவும் சரி, உயிருள்ள மற்றொரு செல் தேவை. எனவே, இது நமது உடலில் உள்ள உயிருள்ள செல்களைத் தாக்கி, அவற்றை முற்றிலும் மாற்றி, அவற்றையும் வைரஸ்களாக மாற்றிவிடும். நொடிக்கு நொடி மளமளவென்று இனப்பெருக்கமடைந்து இரத்தத்துடன் கலந்து – காய்ச்சல், தலைவலி போன்ற நோய்களைத்தரும். தோலில் கொப்புளங்களாக ஏற்படும் சின்னம்மை, பெரியம்மை போன்றவை வைரஸ் நோய்களே. மேலும் ஹேர்ப்ஸ் சிம்ப்ளக்ஸ், அக்கி, பரு, பால் உண்ணி மற்றும் எய்ட்ஸ் போன்ற தோல் நோய்களும் வைரஸால் ஏற்படுபவையே.

**அக்கி (Herpeszoster)**

உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து போகும்போது இந்த நோய்களை வைரஸ், நமது உடலின் உணர்ச்சி நரம்புகளைத் தொடர்ந்து தாக்கும். அவ்வாறு தாக்கும்போது சிறியநீர்க் கொப்புளங்கள் ஏற்படும். நாளடைவில்



கொப்புளங்கள் உடைந்து நீர் கசியும். கொப்புளத்தோல் பிரிந்து அடியில் சிவப்புநிறமாகத் தோற்றமளிக்கும். கிருமிகள் சேர்ந்து சீழ் பிடிக்கும். காய்ச்சல் வரும். வலி எடுக்கும். இரண்டு வாரங்களில் கண்ணிலும் நெற்றியிலும் கூட இந்நோய் தோன்றும்; இன்னும் சிலருக்கு இந்நோயின் விளைவாகச் சின்னம்மை கூட தோன்றும்.

**மருக்கள்**

இவை ஆண், பெண், குழந்தைகள், பெரியவர்கள் இப்படி யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மருக்கள் பொதுவாகப் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்குமே தவிர, அவற்றால் எந்தவிதமான தொந்தரவும் இல்லை. இவை பாதம், நகம், ஆண், பெண் பிறப்புறுப்புகளில் வரலாம். இந்நோய்க்கு பார்மலின் 10% என்னும் மருந்தை சிகிச்சைக்குப் பயன்படுத்தலாம். ஆண், பெண் பிறப்புறுப்புகளில் இவ்வித மரு உள்ளவர்கள், போடோபைலம் என்னும் மருந்தை மருத்துவரின் ஆலோசனைப்படி பயன்படுத்தலாம்.

**கரப்பான் படை நோய்**

மிக வேகமாகப் பரவும் தோல் நோய் ஆண், பெண், சிறியோர், பெரியோர் அனைவரையும் பாதிக்கக்கூடிய தோல்நோய் ஆகும். இந் நோயை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. வெளிப்புற மாறுதலால் ஏற்படும் கரப்பான்

2. உட்புற மாறுதலால் ஏற்படும் கரப்பான்.

**பொதுவாகத்தோலில் ஏற்படும் மாற்றம்**

சிவந்து, பொரிப்பொரியாக, கொப்புளங்களாக மாறி, நீர்கொட்டும் நாட்கள் ஆக ஆக, காய்ந்து செதில்கள் தடிக்க ஆரம்பிக்கும், இவ்வாறான கரப்பான்கள்:

1. ஒவ்வாமை கரப்பான் (Atopic Dermatitis) 2. எண்ணெய் கரப்பான் 3. ஒட்டுக் கரப்பான் எனப் பலவகைப்படும்.

**ஒவ்வாமை கரப்பான்**

இந்த நோயை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

★ 2 மாதத்திலிருந்து 2 வயது வரை ஏற்படுபவை

★ 2 வயது முதல் 10 வயது வரை ஏற்படுபவை

★ 10 வயதிற்கு மேல் ஏற்படுபவை.

முழங்கால்களின் பின்புறம், முழங்கைகளின் முன் புறம் காணப்படும். அரிப்பு அதிகமாக ஏற்படும். கன்னம் சிவந்து, சிறிய சிறிய கொப்புளங்கள் ஏற்படும். பின்னர் அவை உடைந்து பெரியதாக மாறும். பிறகு உடம்பு முழுவதும் படிப்படியாகப்பரவும். சொறியச் சொறிய கொப்புளங்கள் உண்டாகி, தோல் தடித்துக் காணப்படும். சில உணவுகள் மற்றும் உடைகள் ஒத்துக்கொள்ளாது.

**முதிர்வடைந்த ஒவ்வாமை கரப்பான்**

இந்நோய் குறிப்பாக முழங்கால் மற்றும் முழங்கைகளின் பின்புறம் தோன்றும். ஆரம்ப காலத்தில் தோல் சிவந்தும், தோல்செதில்கள் வெளிவந்தும் காணப்படும். பின்னர் கொப்புளம் ஏற்படும். அதன் கட்டிகள் உடைந்தும் புண்கள் ஏற்படும்.

**எண்ணெய்க் கரப்பான்:**

பெரும்பாலும் தோலில் எண்ணெய்ப் பசைஅதிகம் உள்ளவர்களுக்கு இந்த வகையான கரப்பான் உண்டாகிறது. மஞ்சள் நிற எண்ணெய்ப்பசையுள்ள செதில்கள் தோலில் மேல்பாகத்தில் காணப்படும். பொடுகு, முகப்பரு போன்றவையும் இவற்றுடன் சேர்ந்து காணப்படும். உடலில், குறிப்பாகத் தலைப் பாகம் புருவங்கள் மூக்கின் ஓரம், மார்பு பாகம்,

தோல் மடிப்பு முதலிய இடங்களை இந்த நோய் பாதிக்கும். சில சமயம் உடம்பு முழுவதுமே பாதிக்கப்படலாம்.

**சிகிச்சை:**

அடிக்கடி உடலைச் சோப்பு போட்டு, வெந்நீரில் குளிக்கவேண்டும். ஸ்டிராய்டு கிரீம் பயன்படுத்தலாம். தைலம் தடவலாம். ஸ்டிக் ராய்டு என்ற மருந்தையும் உட்கொள்ளலாம்.

**ஒட்டுக்கரப்பான் (Contact Dermatitis)**

உடலுக்கு ஒத்துக்கொள்ளாத பொருள் தோல் மீது பட்டால் சிலமணி நேரத்திலோ அல்லது சில நாட்களிலோ அந்த இடம் தடித்து வீங்கிவிடும்; இதனை ஒட்டுக்கரப்பான் என்பர். உடலில் ஒருசில இடத்தில் மட்டுமே அப்பொருள் ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பதில்லை. உடலின் எப்பகுதியில் பட்டா லும், ஒட்டுக்கரப்பான் ஏற்படலாம். மீண்டும் மீண்டும் அப்பொருள் தோலில் படப்பட, மீண்டும் மீண்டும் ஒட்டுக்கரப்பான் வந்துகொண்டேயிருக்கும். இந்த ஒட்டுக் கரப்பானால் அரிப்பு, எரிச்சல் தோன்றும்; புண் உண்டாகும்.

இவ்வகை கரப்பான்கள் - செய்யும் தொழிலாலும், உடுத்தும் ஆடைகளினாலும், அணியும் காலணிகளாலும், பயன்படுத்தும் அலங்காரப் பொருட்களாலும், உண்ணும் உணவாலும், பயன்படுத்தும் மருந்துகளாலும், உலோகங்களாலும், தாவரங்களாலும் வரும் என்பதை மருத்துவ அறிவியலார்கள் கண்டறிந் துள்ளார்கள்.

இவ்வித ஒட்டுக் கரப்பான் நோயினைப் பற்றிக் கண்டறிந்த ஆரம்பகால அறிவியல் அறிஞர்கள் ஜட்சான், பஸிக் சுல்ஸ்பர்க்கர், ப்ரஜண்ட் பேமக் முதலானவர்கள் முக்கிய மானவர்கள் ஆவர். தோல் நோயினால் பாதிக்கப்படும் மக்களில் 4 சதவிகிதம் முதல் 7 சதவிகிதம் வரை ஒட்டுக்கரப்பான் நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை இவ்வறிஞர் கள் கண்டுபிடித்துக் கூறினர். இவர்களுள் ஜட்சான் எனபவர் ஒட்டுக்கரப்பானைக் கண்டுபிடிக்க பேட்ச்டெஸ்ட் என்னும் பரிசோதனையை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.

உடம்பின் தோலில் சில ஒத்துக்கொள்ளாத பொருள்கள் படும்பொழுது, தோலிலுள்ள 'புரோட்டீன்' கலந்து முழு 'ஆன்டிஜனாக' உருவெடுத்து நிணநீர் வெள்ளணுக்கள் மூலமாக லங்கர்உறான் செல் உதவியுடன் அடைகிறது. அங்கிருந்து உடம்பில் எல்லாப் பாகங்களிலும் நோய் எதிர்ப்புச் சக்தி தாங்கியுள்ள வெள்ளணுக்கள் உடல் முழுவதும் பரவு கின்றன. இதனால் ஒட்டுக்கரப்பான் வேகமாகப் பரவுகிறது. இந்நோய் எல்லா வயதினருக்கும், பரம்பரைத் தன்மை காரணமாகவும் வர வாய்ப்புள்ளது.

**ஒட்டுக்கரப்பானில் இரண்டு பிரிவுகள்:**

தோலில் ஒத்துக்கொள்ளாத பொருள் படும்பொழுது சில மணி நேரங்களில் உண்டாகும் கரப்பான் ஒரு வகை. சில நாட்களில் உண்டாகும் கரப்பான் மற்றொரு வகை.

சாதாரணமாகச் சிலருக்கு உடம்பில் டெட்டால் (Dettol) ஹபினாயில் முதலிய பொருட்கள் பட்டவுடனேயே எரிச்சல் உண்டாகிப் புண் ஏற்படும். இதற்கு ஒட்டு உறுத்தல் கரப்பான் என்று பெயர்.

சிலருக்கு ஒவ்வாமைப் பொருள் உடலில் பட்ட சில நாட்கள் சென்ற பின்னர் தோலில் சில மாற்றங்கள் ஏற்பட்டு, அரிப்பு மற்றும் எரிச்சல் வந்தால் அதற்கு, ஒட்டு உணர்தல் கரப்பான் என்று பெயர்.

**நோய் அறிதல்:**

நோயாளி செய்யும் தொழில், பொழுது போக்கு, அன்றாடம் கையாளும்பொருள், உட்கொள்ளும் மருந்து மாத்திரைகள் மற்றும் வெளி தடவும் களிம்பு போன்றவற்றைத் தீர விசாரித்து அறியவேண்டும். அதன் பின்னர் அவருக்கு எந்தப் பொருளினால் ஒவ்வாமை வருகிறதோ, அந்தப் பொருள் எக்காரணத்தைக் கொண்டும் அவர் உடம்பில் படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சில வேளைகளில் எந்தப் பொருளால் தனக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது என்பது, நோயாளிக்கே தெரியாமல் போகலாம். நோயாளிக்கே தெரியாமல் நீண்டநாள் பழக்கத்திலுள்ள ஒரு பொருள்கூட ஒவ்வாமை

உண்டாக்கலாம். அதைத் தெரிந்து கொள்ளாமலேயே அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக்கொண்டும் வரலாம். எனவே, இதனைக் கண்டறிய நோயாளியின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகிறது.

பேட்ச்டெஸ்ட் என்னும் சோதனை மூலம் ஒவ்வாமைக் காரணத்தைக் கண்டறியலாம். இனி இவ்வகைக் கரப்பான்கள் தோன்றக் காரணமாக உள்ளவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

**செய்யும் தொழிலும் ஒட்டுக் கரப்பானும்:**

தான் செய்யும் தொழில் மூலமாகச் சிலருக்கு ஒட்டுக் கரப்பான் வரலாம். விவசாயிகள், தோட்டக் கலைஞர்கள், மருந்தாளுநர்கள், மருத்துவச் செவிலியர்கள் போன்றோர் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள், கருவிகள், புகை, நெடி, ஆவி போன்றவை அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்தலாம். அதனால் அவர்களுக்கு ஒட்டுக்கரப்பான் நோயும் ஏற்படலாம்.

டி.டி.டி., லிண்டேன், ஆர்கனோ, பாஸ்பரஸ் காம்பவுண்டு போன்றவற்றால் விவசாயிகள், தோட்டக்கலை நிபுணர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது. மேலும் நீண்ட நேரம் சூரிய வெப்பக் கதிர்வீச்சில் வேலை செய்வோரின் தோலில் தடிப்புத் தன்மையும், இறுக்கமும் அதிகமாகி ஒவ்வாமையை ஏற்படுத்தும். ரேடியோகதிர் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு முதற்கட்டமாக முடி உதிரும். தோலில் இரத்தம் கட்டும். எரிச்சல் ஏற்படும். புண் உண்டாகி ஒட்டுக் கரப்பான் பரவும்.

**உடுத்தும் ஆடையும் ஒட்டுக் கரப்பானும்:**

ஆடைகள் பகட்டாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தற்போது விதவிதமான ஆடைகளை உடுத்துகின்றனர். ஆனால் தற்கால ஆடைகள் பலவற்றிலும், இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதைப் பலரும் அறிந்து கொள்வதில்லை. உடுத்தும் ஆடைகளில் கலந்திருக்கும் சாயம் (Dyes), பார்மல்டிஹைடு (Formaldehyde) ரெசின் (Resin) குரோமியம் (Chromium) போன்ற இரசாயன இழைகளை உடலில் ஏற்றுக்கொள்ள இயலாமல் போகவே, ஒட்டுக் கரப்பான் நோய் உண்டாகிறது. தற்போது கவர்ச்சிகரமாகவும் எடுப்பாகவும் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக



உடலோடு ஒட்டிய உடைகளை அணிந்து வருகின்றனர். இதனால், அதிக வியர்வை, அழுத்தம், அழுக்கு, உராய்வு போன்றவை ஏற்பட்டு ஒட்டுக்கரப்பான் தாக்குகிறது. அவ்வாறே முரட்டுத் தனமான ஆடைகளை அணியும்போது இரத்த நாளங்கள் அழுத்தப் பெற்று வலி, வீக்கம், நரம்புக் கோளாறு போன்றவை ஏற்படுகின்றன. இதனாலும் ஒட்டுக் கரப்பான் ஏற்பட்டு உடல் நலமும் பாதிக்கப்படுகிறது.

இந்நோயைத் தவிர்க்கவேண்டுமானால் எளிய காற்றோட்டமுள்ள ஆடையை அணிந்துகொள்வதுதான் சாலச் சிறந்தது.

**காலணிகளும் ஒட்டுக்கரப்பானும்:**

அணியும் காலணிகள் தற்போதெல்லாம் இரசாயனக் கலவையால்தான் உருவாகின்றன. தோல் செருப்புகளில் குரோமியம் மற்றும் தாவரப் பொருட்கள் கலந்திருக்கின்றன. இவை ஒவ்வாமையை ஏற்படுத்தும். இரப்பர் செருப்புக்களில் கலந்துள்ள மெர்காப்டோமிக்ஸ் (Mercaptomix) ஒவ்வாமைக்கு மூல காரணங்கள் ஆகும். சில சமயம் பிளாஸ்டிக் செருப்பு போடுபவர்களுக்கு பிளாஸ்டிக் செருப்பின் மேற்பட்டைக்கு அடியில், தோலில் வெண்குட்டம் ஏற்படும். மானோ பென்சைல் ஈதர் ஆப் ஹைடிரோகுயின் (Mono Benzyl Ether of Hydroquinine) என்னும் இரசாயனப் பொருள்தான் இதற்குக் காரணம். எனவே அணியும் காலணிகளையும் விழிப்புடன் பார்த்து அணியவேண்டும்.

எவ்விதத் தோல்வியாதியானாலும் சரி; அலட்சியம் செய்யாமல் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.

சென்ற இதழின் தொடர்ச்சி

# வேலை வாய்ப்புகள்


***(4) ஊழியத்தேர்வாணைக்குழு* (Staff Selection Commission)**

இது ஒரு மத்திய அரசு அமைப்பு. போட்டித் தேர்வுகளின் மூலம் இது பணியாளர்களைத் தேர்வு செய்யும். இந்நிறுவனம் நடத்தும் தேர்வுகள் சில :

1. Clerks Grade Examination.
2. Inspectors of Central Excise and Income Tax Officers Examination.

மேற்கூறப்பட்ட குமாஸ்தா நிலைத் தேர்வுக்கான கல்வித் தகுதி இளநிலைப் பட்டதாரி வயது வரம்பு 21 முதல் 25 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் இக்குழு (S.S.C.) வினரால் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்ற பின்னரே பணி நியமனம் செய்யப்படுவர்.




இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் குழு X,Y என வகுக்கப்பட்டுள்ளன. குழு X அலுவலகங்கள் மைய அமைச்சகங்களுக்கும், (Ministries and Departments of Central Government) ஆகும். இவை டெல்லியில் உள்ளன.

குழு Y அலுவலகங்கள், "Subordinate and other offices of the Central Government located in different states" ஆகும்.

(i) இத்தேர்வுக்கான பாடத்திட்டம்
பகுதி 1 : எழுத்துத் தேர்வு
பகுதி 11 : தட்டச்சுத் தேர்வு

எழுத்துத் தேர்வு நான்கு பிரிவுகளாகக் கொண்ட, புற வய வினாக்களாக அமைக்கப்பட்டு இருக்கும்.

1. பொது அறிவு – 50 மதிப்பெண்கள்
2. ஆங்கில அறிவு – 50 மதிப்பெண்கள்

3. கணித அறிவு - 50 மதிப்பெண்கள்
4. பொதுத் திறன் - 50 மதிப்பெண்கள்

என 200 மதிப்பெண்களாகக் கொண்டது எழுத்துத் தேர்வு.

இதில் தட்டச்சுத் தேர்வு என்பது 10 நிமிட கால அளவில் நடத்தப்படும்; இது தகுதி பெறுவதற்காக மட்டும் தான்.

**(ii) Inspectors of Central Excise and Income Tax Officer's Examination**

இத்தேர்வும் ஊழியர் தேர்வாணைக் குழுவால் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வு வருடத்திற்கு இரு முறை நடத்தப்படுகிறது. ஏப்ரல் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் இத்தேர்வு நடைபெறுகிறது.

கல்வித் தகுதி: இளநிலைப் பட்டதாரி.

(i) இத்தேர்வுக்கான பாடத்திட்டம் :
பகுதி 1 : எழுத்துத் தேர்வு
பகுதி 11 : நேர்முகத் தேர்வு

எழுத்துத் தேர்வு நான்கு பிரிவுகளாகப் புற வய (Objective) வினாக்களாகக் கொண்டிருக்கும்.

1. பொது அறிவு - 60 மதிப்பெண்கள்
2. ஆங்கில அறிவு - 40 மதிப்பெண்கள்
3. கணித அறிவு - 40 மதிப்பெண்கள்
4. பொதுத் திறன் - 60 மதிப்பெண்கள்

என 200 மதிப்பெண்களைக் கொண்டிருக்கும்.

இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

இந்த ஊழியத்தேர்வாணைக்குழு (S.S.C.) நடத்தும் தேர்வுகளின் மூலம் ஒவ்வொரு வருடமும் இந்தியா முழுவதுமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். ஆண்டு தோறும் நடத்தப்படும் இத்தேர்வுகளில் வெற்றி பெறுபவர்களில், நம் தமிழகத்தின் பங்கு மிகக் குறைந்தே காணப்படுகிறது.

**(iii) Divisional Accountants / Auditors / Upper Division Clerks etc.**

ஊழியர் தேர்வாணைக் குழு (S.S.C.) வால் நடத்தும் போட்டித் தேர்வுகளில் இதுவும் ஒன்றாகும். இத்தேர்வுகளில் வெற்றி பெறுபவர்கள் கீழ்க் கண்ட அலுவலகங்களில் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

1. Divisional Accountants in the various offices of Accountant General under C & A.G.

2. Auditors in the offices of the Accountant General (Audit) and in various states and other Audit and Accounts Officers under the C & A.G.

3. Auditors in the Defence Department.

4. Junior Assistants in the various departmentalised Accounts offices in the Central Ministries / Departments.

5. Upper divisions clerks in the offices under the charge of various commissioners of Income Tax.

6. Upper division clerks in the offices under the formation of various collectorates of Central Excise and Customs.

இத்தேர்வில் பங்கு பெறுபவர்கள் வயது வரம்பு 21 முதல் 25 வரை என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இத்தேர்வில் பங்கேற்க ஒரு இளங்கலைப் பட்டத்துடன் சார்ட்டர்டு (C.A.) முடித்திருக்க வேண்டும்.

இத்தேர்வு 2 மணி நேரத்தில் எழுதப்படும் புற வய வினாக்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கும். ஆனால், இதில் ஆங்கில அறிவு அக வய வினாக்களாக அமையும். இத்தேர்விற்கான மதிப்பெண்கள் 200.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**(5) இரயில்வே மூலம் வேலை வாய்ப்புகள்:**

நம் நாட்டில் வேலை வாய்ப்பு அளிப்பதில் இரயில்வே 'ரிக்ரூட்மெண்ட போர்டு' (Railway Recruitment Board) மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இது மாநிலங்களில் ஏற்படும் காலி இடங்களுக்கு ஏற்ப R.R.B. போட்டித் தேர்வுகளை அந்தந்தச் செய்தித்தாள்கள், Employment News (Weekly) மூலமாக விளம்பரம் செய்கின்றது. இத்தேர்வுகள் பட்டப்படிப்பு படித்தவருக்கு மட்டுமில்லாமல் பத்தாம் வகுப்பு முடித்து ஏதேனும் தொழிற்கல்வி கற்றவரும் கூட வேலை வாய்ப்பினைப் பெற உதவி செய்கிறது. இத்தேர்வுகளில் பங்கு பெறுபவர்களின் வயது வரம்பு 18 முதல் 30 வயது வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**தேர்வுத் திட்டம் :**

R.R.B. இத்தேர்வுகளை இரண்டு பிரிவுகளாக வகுத்துள்ளது.

1. எழுத்துத் தேர்வு
2. நேர்முகத் தேர்வு

எழுத்துத் தேர்வில் 200 மதிப்பெண்களைக் கொண்ட புலனறி வினாக்கள் கீழ்க் கண்ட பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

1. பொது அறிவு – 50 மதிப்பெண்கள்
2. பொது ஆங்கிலம் – 50 மதிப்பெண்கள்
3. கணித நுண் அறிவு – 50 மதிப்பெண்கள்
4. தன் அறிவு சோதனை – 50 மதிப்பெண்கள்

இது மட்டுமல்லாமல் போட்டியாளர்களின் ஆங்கில அறிவைச் சோதிப்பதற்காகச் சிறு ஆங்கில கட்டுரை அமைப்பு போன்ற கேள்விகள் இருக்கும்.


இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் RRB யினரால் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் படுவர். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவரவர் மாநிலங்களிலேயே பணி நியமனம் செய்யப்படுவார்கள். RRB யின் மூலம் ஆண்டு தோறும் இந்தியா முழுவதிலும் மாநிலங்கள் வாரியாக நடத்தப் பெறும் தேர்வுகளின் மூலமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்புப் பெறு கின்றனர். எனவே வேலை வாய்ப்பு அளிப்பதில் RRB முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

**6. இந்திய ராணுவம் (Armed Forces)**

தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற மூன்று பிரிவுகளிலும் பல்வேறு நிலைகளுக்கான தேர்வுகளும், தேர்வுகளை அணுக வேண்டிய முறைகள் பற்றியும் அவ்வப்போது வரும் அறிவிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து இளைஞர்கள் செயல்பட வேண்டும். (Employment News) மற்றும் வட்டார மொழிகளிலும் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்த அறிவிப்புகளில் கல்வித் தகுதி, வயது வரம்பு, பணிகளுக்கான பயிற்சி துவங்கும் காலம், எப்படி, யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? என்பன போன்ற செய்திகள் வெளியிடப்படுகின்றன. மூன்று பிரிவினருக்கும், மூன்று துறைகளுக்கும் பொதுவாக நுழைவுத் தேர்வினை நடத்துகிற National Defence Academyயின் பயிற்சிகளுக்கு ஆண்டு தோறும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் அறிவிப்பினை மையத் தேர் வாணையம் வழங்குகிறது. அறிவித்த நாளி லிருந்து ஆறு வாரங்களுக்குள் விண்ணப் பத்தினை நிறைவு செய்து அளித்திட வேண்டும். எழுத்துத் தேர்வு இரண்டு நாள்களில் நடைபெறும்.

| தாள் | நேரம் | மதிப்பெண் |
|---|---|---|
| கணிதம் | 2.30 மணி | 300 |
| பொது நுண்ணறிவு சோதனை | 2.30 மணி | 600 |

வினாக்கள் புறவய வகையைச் சார்ந்தன. வினாக்கள் ஆங்கிலத்திலேயே இருக்கும். இரண்டு தேர்வுகளுக்கும் உரிய பாடத் திட்டங் களும் அறிவிக்கையிலேயே அறிவிக்கப்படும். பின்னர் உடற்கட்டுத் தகுதிகள் நடத்தப்பட்டு,



நேர்முகத் தேர்வும் நடத்தப்படும். அதன் பின்னர் மருத்துவத் தகுதியும் சோதிக்கப்படும். ஜனவரி முதல் நாளும், ஜுலை ஒன்றாம் நாளும் இரண்டு பயிற்சிகளை அகாடமி நடத்துகிறது. ஏறக்குறைய 300 பயிற்சியாளர்கள் ஒவ்வொரு தேர்வுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**கப்பல் படை (பொறியியல் பிரிவு)**

10+2 (இயற்பியல், வேதியியல், கணிதம்) இவற்றுள் குறைந்தபட்சம் 70 விழுக்காடு பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இவர்களை (Service Selection Board) தகுதியின் அடிப் படையில் நேர்முகத் தேர்வும், உடற்கட்டுத் தேர்வும் நடத்தித் தேர்ந்து எடுக்கும். நான்கு ஆண்டுகள் கடற்படைப் பொறியாளர்களாகப் பயிற்சி பெற்ற பின்னர் இவர்கள் பணியில் அமர்த்தப்படுவர். 10+2 (உயிரியல்) படித்தவர்களை (Medical Crops) க்காகத் தேர்ந்தெடுப்பார்கள். பூனா நகரில் உள்ள இராணுவ மருத்துவக் கல்லூரியில் இவர்கள் பயிற்சி பெறுவர். ஆண்டு தோறும் 105 மாணவர்களும் 25 மாணவியர்களும் இப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பட்டதாரி, பட்ட மேற்படிப்பு படித்தவர் களை இராணுவப் பணிக்கானப் பயிற்சிக்கு "Indian Military Academy" (IMA) - Dehradun, Naval Acadamy - Goa, Air Force Academy - Dundugal, Officer's Training School - Madras. ஆகிய இவைகள் தேர்ந்து எடுக்கிறது. மையத் தேர்வாணையம் இதற்கான விளம்பரங்களை மே மாதத்திலும், நவம்பர் மாதத்திலும் வெளியிடுகிறது. ஆண்டில் இரண்டு முறை தேர்வுகள் நடைபெறுகின்றன. மையத் தேர்வாணைய அறிக்கை இதனைப் பற்றிய முழு விவரங்களை வெளியிடுகிறது.

**தேர்வுத் திட்டம்**

| பாடம் | காலம் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 1. ஆங்கிலம் | 2 மணி | 100 |
| 2. பொது அறிவு | 2 மணி | 100 |
| 3. ஆரம்ப நிலைக் கணிதம் | 2 மணி | 100 |

இப்பாடத் திட்டம் IMA, National Academy மற்றும் Air Force Academy க்கு உரித்தானது.

Officers Training Academy யில் சேர்வதற்கு கீழ்க்கண்ட பாடத்திட்டம் வரையறுக்கப் பட்டுள்ளது.

| பாடம் | காலம் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. ஆங்கிலம் | 2 மணி | 100 |
| 2. பொது அறிவு | 2 மணி | 100 |

இத்தேர்விற்கான வினாக்கள் புறவய வினாக் களாகவும், ஆங்கிலத்திலும் இருக்கும்.

இந்திய இராணுவத்தின் மகளிருக்கான சிறப்பு நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றது. காலியிடங்களுக்கு ஏற்ப விளம்பரங்கள் தரப்படுகின்றன. இதற்கான விளம்பரங்களை (Employment News) வெளி யிடுகிறது. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Additional Directorate General of Recruiting
(Women Entry Section)
West Block III,
R.K. Puram,
New Delhi - 110 066.

விளம்பரத்திலேயே விண்ணப்பப் படிவங் களும் இணைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**Para Military Forces**

இது மூன்று அமைப்புக்களை உள்ளடக்கியது.

(i) Indo Tibetian Border Force (ITDP)
(ii) Central Reserve Police Force (CRPF)
(iii) Border Security Force (BSF)

இப்பிரிவினர்கள் நமது நாட்டின் எல்லையில் பாதுகாப்பதோடு உள் நாட்டுப் பாதுகாப்புப் பணியினையும் செய்துவருகின்றனர். வீரச் செறிவு மிக்கவர்கள் இப்பணியில் சேரலாம். இப்பணிக்கான நுழைவுத் தேர்வு, எழுத்துத் தேர்வு, உடற் பயிற்சித் தேர்வு, நேர்முகத் தேர்வு என மூன்று தன்மையது. எழுத்துத் தேர்வில் இரண்டு நாட்கள், முதல் தாளில் பொது அறிவு, அடிப்படைத் திறன், கணித நுண்ணறிவுகள் சோதிக்கப்படுகின்றன. இரண்டாம் தாளில் ஆங்கிலம் (அ) இந்தி மொழிச் செம்மை சோதிக்கப்படுகிறது. தேசிய மாணவர் படையைச் சார்ந்தோருக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் தேர்வில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இப்பணியில் சேர விழைவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

(i) Deputy Director (Personal), BSF HQ Block No. 10, C.G.O Complex, Lodhi Road, New Delhi - 110 003.

(ii) Directorate General, Indo - Tibetian Border Police
(M.H.A.) Block 2, CGO Complex, Lodhi Road, New Delhi - 110 003.

(iii) Central Reserve Police Force, CGO Complex Lodhi Road, New Delhi - 110 003.

**கடற்கரைக் காவல் படையினர் (Coastal Guard)**

இதற்கான நேரடித் தேர்வும் பயிற்சியும் பற்றிய விளம்பரங்கள் (Employment News) வெளியிடப் படுகின்றன. எட்டாம் வகுப்புப் படித்தவர்கள் கூட Navik (Domestic Branch) சேர்ந்து பணியாற்ற முடியும். இவர்களுக்கு வயது 17 லிருந்து 22 வயது வரை இருக்கலாம். SC,ST பிரிவினருக்கும் 5 ஆண்டு விதி விலக்கு உண்டு. நல்ல உடற்கட்டு இருக்க வேண்டும். உயரம் 187 செ.மீ எடை 45 கிலோ இருக்க வேண்டும்.

பத்தாம் வகுப்புப் படித்தவர்கள் Navik (General Duty) யில் சேர்ந்துவிடலாம். இதே வயது வரம்பும், உடற்கட்டும் பொருந்தும்.

மெட்ரிக் படித்து மெக்கானிக்கல் எலக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக் பொறியியல் டிப்ளமோ பெற்றவர்கள் 22 வயது நிரம்பியிருந்தால் Yantrik (Techical Branch) ல் சேர வாய்ப்பிருக்கிறது. SC/ST பிரிவினருக்கு உச்ச வயது வரம்பு 27 ஆகும். ஏனைய பதிவுகளுக்கான உடற்கட்டு இதற்கும் பொருந்தும். தமிழகத்தைச் சார்ந்தவர்கள் SC/ST பிரிவினர் இத்துறையில் சேர்ந்திட முயற்சி மேற்கொள்ளலாம். மேலும் இந்தத் துறையில் Officers Cadre பயிற்சியும், நியமனமும் நடைபெறுகின்றன. பட்டதாரிகள் Assistant Commandant (Central Duty) பதவிக்கு விண்ணப்பிக்கலாம். 12ம் வகுப்பு படித்தவர்கள் அல்லது Commercial Pilot Licence வைத்திருப்பவர்கள் Assistant Commandant பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

> முயற்சி வளர்ந்து தேயும் நிலவு அல்ல; மேலே மேலே வளர்ந்து கொண்டிருப்பது.
>
> — பிளிங்கடன்

Director (Training) Recruitment Cell, Coast Guard Head Quarters "E", Block Huttments, DHQ PO Delhi - 110 001.

**தொழிற் பாதுகாப்புப் படை (Industrial Security Force)**

பெரிய தொழிலகங்களை இப்படையினர் பாதுகாக்கின்றனர். பாட்னா பல்கலைக்கழகம் 'Post-Graduate 'Diploma in Industrial Safety Management' என்ற துறையில் பயிற்சி அளிக்கிறது. ஓராண்டு கால டிப்ளமோ படிப்பிற்குச் சேர இயற்பியல், வேதியியல், கணிதம் படித்த பட்டதாரிகள் அல்லது இளநிலைப் பொறியியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். பொறியியல் பட்டதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. மொத்தம் உள்ள 50 இடங்களில் 10 இடங்கள் நிறுவனங்கள் அனுப்புகின்றவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வு இரு நிலையினது. 1. எழுத்துத் தேர்வு 2. நேர்முகத் தேர்வு.

எழுத்துத் தேர்வு 3 தாள்களைக் கொண்டது.

(1) கணிதம் (2) இயற்பியலும், வேதியியலும் (3) பொது அறிவு.

ஒவ்வொரு தாளுக்கும் 50 மதிப்பெண்கள் வினாக்கள் புறவய வினாக்கள் ஆகும். நேர்முகத் தேர்விற்கு 50 மதிப்பெண்களே. தென் மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இத்தேர்வு குறித்து மேலும் விவரங்கள் அறிய வேண்டுமானால் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும்.

DIG. CISF (South Zone), TNHB Building, Anna Nagar East, Madras 600 102.

தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இத்துறையில் தங்கள் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு முயலவேண்டும்.

மைய விசாரணைக்கு (Central Bureau of Investigation)

இப்பொழுது நாடெங்கிலும் இந்த அமைப்பினைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுவதை நாம் அறிவோம். இந்த அமைப்பில் பணியாற்றுவதற்கு, பலத்த போட்டி இருக்கிறது. மையத் தேர்வாணையம் இதற்கான அறிவிப்பினை வெளியிடுகிறது.

இந்த அமைப்பில் Sub-Inspector Assistant Public Prosecutor, Senior Public Prosecutor Group 'D' போட்டித் தேர்வின் மூலம் நேரடியாகத் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர்.

Assistant Public Prosecutor பணிக்குக் குறைந்த அளவு 5 ஆண்டு பயிற்சியுள்ள இளநிலை சட்டப்பட்டதாரி விண்ணப்பிக் கலாம். DSP பதவிக்கு பத்தாண்டுப் பயிற்சியுள்ள சட்டப்பட்டதாரி விண்ணப்பிக் கலாம். Sub-Inspector பதவிக்கு Central Staff Selection Commision ஒவ்வொரு ஆண்டும் ஜுன் - ஆகஸ்டு மாதங்களில் போட்டித் தேர்வு நடத்தித் தேர்ந்து எடுக்கும். Sub-Inspectorக்கான வயது வரம்பு 18 லிருந்து 25 வயது வரை பட்டதாரியாக இருக்கவேண்டும். அவருடைய உயரம் 5' 6", மார்பளவு 32' + 2".

ஆங்கிலத்திலும், பொது அறிவிலும் எழுத்துத் தேர்வு நடைபெறுகிறது. பின்னர் நேர்முகத் தேர்வு. தமிழகத்தினர் இத்துறையில் வேலைவாய்ப்பினைப் பெற முயற்சிக்க வேண்டும்.

**9. கம்பெனி செக்ரட்டெரிஷிப் (Company Secretaryship)**

ஒரு குழுமத்தின் சட்ட பூர்வப் பணிகளையும், பங்குகள் வழங்குவதையும் கவனிப்பவர் கம்பெனி செகரெட்டரி ஆவார். இந்தத் துறை அண்மைக் காலங்களில் வாணிபக் குழுமங்கள் அதிகரித்து வருவதால் சிறப்புப் பெற்றுவருகிறது. முன்பெல்லாம் இந்தப் பயிற்சியினை மேற்கொள்ள விரும்புபவர் இளநிலைப் பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது +2 முடித்தவர்கள் Foundation Course சேர முடியும். +2 படிக்கின்ற மாணவர்கள் கூட இப்பயிற்சியில் சேர முடியும். அனால் பயிற்சியில் சேர்ந்த ஆறு மாதங்களுக்குள் +2 தேர்வில் வெற்றி பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் சேர்க்கப்பட்டவர்கள் டிசம்பர் மாதத்தில் தேர்வு எழுதலாம். செப்டம்பர் மாதத்திற்குள் சேர்க்கப்பட்டவர்கள் அடுத்த ஆண்டு ஜுனில் தேர்வு எழுத அனுமதிக்கப் படுவர். Foundation Courseல் நான்கு பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.




அவைகளாவன.

Business Communication
Business Laws and Management
Principles of Accountancy
Economics and Statistics.

இந்தப் பயிற்சி அஞ்சல் வழியாக வழங்கப்படுகின்றது. மண்டலக் குழுக்களும் (Regional councils and chapters) இப்பயிற்சிக்கான வகுப்புக்களை நாடெங் கிலும் நடத்துகின்றது. விரும்புகின்ற மாணவர் கள் கட்டணம் செலுத்தி இப்பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தேர்வினை ஆங்கிலத்திலோ, இந்தியிலோ எழுதலாம். பயிற்சிப் பாடங்கள் ஆங்கிலத்திலேயே இப்பொழுது வழங்கப்படுகின்றன. இப்பயிற் சிக்கான பதிவுக் கட்டணம் ரூ. 800/- ஆகும். இப்பயிற்சியில் வெற்றிபெற்றவர்கள் கம்பெனி செகரெட்டரிஷிப் கோர்ஸில் மாணவர்களாகப் பதிவு செய்யப்படுவர்.

நுண்கலை இளநிலைப்பட்டம் பெற்றவர் கள் தவிர ஏனைய பட்டதாரிகள் Foundation Courseல் இருந்து விதிவிலக்குப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ICAI (அ) ICAWI நிறுவனங்களின் இறுதித் தேர்வினை எழுதிய வர்களுக்கும் விதிவிலக்கு உண்டு.

Foundation Course ல் வெற்றிபெற்ற பின்னர் Intermediate, Final என்ற இரு நிலைகளில் பயிற்சி வழங்கப்படும். முதல்நிலை பயிற்சிக் காலம் 9 மாதங்கள் ஆகும். Final Course படிக்கின்ற மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழுமங்களில் குறைந்தது 12 மாதங்கள் பயிற்சி பெறவேண்டும். மேலும் 4 மாத கட்டாயப் பயிற்சியினையும் பெறவேண்டும். இதில் 3 மாதங்கள் The Institute of Company Secretaryship of India (ICSI) அங்கீகரித்த ஒரு குழுமத்தில் பயிற்சி பெறவேண்டும். Registrar of Companies (or) Stock Exchange அல்லது அதற்குச் சமமான நிறுவனங்கள் ஆகிய ஏதாவது ஒன்றில் 15 நாட்களும் ICSI நேரடிப் பார்வையில் 15 நாட்களும் பயிற்சி பெறவேண்டும். இதன் பிறகுதான் பயிற்சியாளர்கள் Associate Membership of the ICSI என்ற நிலையினைப் பெற முடியும். இத்தகைய பயிற்சியைப் பெற்றவர்கள் வங்கிகள், நிதி நிறுவனங்கள், Stock Exchange, Company Law Boards, Department of Company Affairs, தனியார், பொது வணிகக் குழுமங்கள், அரசுத் துறைகளில் கம்பெனி செகரெட்டரியாகப் பணியாற்ற முடியும். உலகமயமாகும் இன்றைய சூழலில் இத்துறையினர் உயர் ஊதியம் பெறக்கூடிய வாய்ப்பினைப் பெற முடியும். தொடர்பு முகவரி:

# The Institute of Company Secretaries of India,
ICSI House, 22, Institutional Area,
Lodhi Road,
New Delhi - 110 003

சென்னை நுங்கம்பாக்கத்தில் இந் நிறுவனத்தின் மண்டல அலுவலகம் செயல் படுகிறது.

*10. கணக்கியலார்* **(ACCOUNTANCY)**

கணக்கர்கள் நிறுவனங்களின் நிதிநிலை பற்றிய திட்டமிடலையும் பதிவேடுகளையும் பாதுகாத்துச் செயலாற்றுகின்றனர். கணக்கிய லார் இருவகைப்படுவர்.

1) Charted Accountants (CAS)
2) Cost and Works Accountants (CWA)

+2 முடித்தவர்கள் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

– ஓராண்டு காலத்தில் Foundation Course முடித்த பின்பு, பணியாற்றுகின்ற ஒரு CAயிடம் பயிற்சி பெறுவதற்குப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அனைத்திந்திய நிறுவனத்தின் 3 ஆண்டு பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். ஓராண்டுகாலப் பயிற்சிக்குப் பின்னர் Intermediate தேர்விற்கும் அதற்குப் பின் ஆறு மாத காலப் பயிற்சிக்குப்பின் Final தேர்விற்கும் தயாராகிக்கொள்ள வேண்டும். இறுதித் தேர்வு எழுதி வெற்றிபெற்ற பின்னர் The Institute of Chartered Accountants of India என்ற நிறுவனத்தின் உறுப்பினராகப் பதிவு செய்யப் படுவர். இதற்கான மண்டல அலுவலகம் சென்னையில் உள்ளது. தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

Joint Director of Studies,
The Institute of Chartered Accountants of India,
# 122, Nungambakkam High Road,
P.B. No. : 3314,
Madras - 600 034.

இதற்கான பயிற்சி அஞ்சல் வழியாகவே வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியினைப் பெற்றவர்கள் CA என அழைக்கப்படுகின்றனர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

## மருத்துவக் கண்டுபிடிப்புகள்

**எக்ஸ்ரே** – உள்ளுறுப்புகளின் நோயை நிர்ணயிக்கப் பயன்படும் எக்ஸ்ரே 1905-ல் வில்ஹேல்ம் ராண்ட்ஜென் என்பவரால் கண்டறியப்பட்டது.

**பேஸ்மேக்கர்** – இருதயம் ஒழுங்காக வேலை செய்ய முடியாமற் போகும்போது சிறு மின் அதிர்வுகளைக் கொடுத்து சரியாக இயங்கச் செய்யும் இச்சாதனத்தை 1952-ல் அமெரிக்க டாக்டரான பால் ஜோஸ் கண்டு பிடித்தார்.

**ஸ்டெதாஸ்கோப்** – இருதயம், சுவாசப்பையின் இயக்கத்தை அறிந்து கொள்ள மருத்துவர்கள் பயன்படுத்தும் ஸ்டெதாஸ் கோப்பை 1819-ல் பிரான்ஸ் நாட்டு ரெனி பென்னக் கண்டு பிடித்தார்.

**தெர்மாமீட்டர்** – உடல் வெப்பத்தை அறிய உதவும் இக்கருவியை 1593-ல் இத்தாலி நாட்டு கலிலியோ கண்டு பிடித்தார்.

# வாசகர் இதயம்

ஏதோ கடமைக்கு வாங்கிடும் நிலையில் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழரசு' அறிவுப் பெட்டகமாக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். பாதுகாத்து வைக்கவேண்டிய இதழ் வரிசையில் தமிழரசு இடம் பெற்று விட்டது என்றே கூறலாம்.

**–துரை. சந்திரசேகரன்,**
பெரியார் இல்லம், வடலூர் - 607 303.

புதிய மாவட்டங்கள் உருவாக்கம் பற்றிய செய்திகளை மிகவும் தெளிவுபட வெளியிட்டிருந்தீர்கள்; மிக்க நன்றி.

**– அ. கந்தசுவாமி**
திருப்பூர்

'தமிழரசு' அரசு கெஸட்போலிருந்த நிலைமையை மாற்றி - சிறப்பான வலிமையான உள்ளடக்கத்தோடு வருவது புதுத் தெம்பளிக்கும் விஷயம். மாற்றத்திற்கு நல்வாழ்த்து.

**– சே. காதர் மொகிதீன்**
வந்தவாசி

புதிதாக மலர்ந்திருப்பது 'அரசு' மட்டுமல்ல, பயன்தரும் படைப்புகளோடு புதியபொலிவுடன் மலர்ந்து மணம் பரப்பும் தன்னிகரில்லாத் தமிழரசுமேயாகும்.

**– குருசாமிராஜ்**
காசிபாளையம்

முற்றிலும் பயன்படும் வகையிலும், படித்து மகிழத்தக்க அம்சங்களைத் தாங்கிக் கொண்டும் 'தமிழரசு' வெளிவருவது, உள்ளத்தை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துகிறது. அரசின் திட்டங்களைப் பறைசாற்றும் வெறும் செய்தி ஏடாகமட்டுமன்றிப் பல்சுவையுடன் திகழ்வது மிகச்சிறப்பு.

**– என். சண்முகம்**
திருவண்ணாமலை

ஊட்டச் சத்து வழங்கும் பயறுவகைப் பயிர்கள் போன்ற வேளாண்மைக் கட்டுரையைப் பலரிடமும் படித்துக் காட்டினேன்; அதே போல மருத்துவக் கட்டுரைகளும். நல்ல பணி. தொடர்க.

**– நல்லாசிரியர்**
**ப. முருகேசபாண்டியன்**
கரப்பாடி, நாகூர்

பள்ளிகளை நேசிக்க வைப்போம் என்று தாங்கள் வெளியிட்டிருந்த கவிதை மிகவும் அற்புதம்; மாணவ மாணவிகள் விரும்பும் படியான இப்படிப்பட்டவைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

**– எஸ்.எஸ். வாசன்**
தென்னலப்பாக்கம்,
வந்தவாசி

கையில் எடுத்தாலே தூங்கவைப்பதாக இருந்தது முந்திய ஆட்சியில் வந்த 'தமிழரசு'; இந்த ஆட்சியிலோ, எப்போது வரும் என்று ஏங்க வைக்கிறதே!

**– நீடா. சி. இளஞ்செழியன்,**
சாலியமங்கலம்

ஆசிரியர் மடல், அறிவியல் துளிகள் எல்லாம் தமிழரசைத் தரமுள்ள தாளிகை ஆக்குகின்றன; வளர்க. வெல்க.

**– ச.வே. சுப்பிரமணியன்**
தாத்தையங்கார்பேட்டை

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# ஆசிரியர் மடல்

'மந்திரி நமது மாநகர் தன்னில் மாத மும்மாரி
பொழிகிறதா?' என்று அரண்மனைக்குள்ளேயிருந்து கேட்கும்
மன்னராட்சிக் காலமல்ல இது; மக்களாட்சிக் காலம்!
திரைப்படம் ஒன்றில் இதனை முன்பு எழுதிப் புகழ்பெற்றவரும்
'நீரின்றமையாதுலகு' என்பதை நன்குணர்ந்தவருமான மாண்புமிகு
முதல்வர் கலைஞர் அவர்கள்,நாடு வளம்பெற...
நாட்டுமக்கள் நலம்பெற... மழைமாதம் வரும்வரை
பொறுத்திராமல், தக்க பல நடவடிக்கைகளை இப்போதே
விரைந்து மேற்கொண்டுள்ள மாதம் இது!
அவர்தம் பெருமுயற்சியால், ஆந்திரத்திலிருந்து
கிருஷ்ணா நதிநீர் வரும் மாதமும்கூட!
அதுமட்டுமல்ல; நீண்ட நெடுங்காலமாக
இருந்து வந்த காவிரி நதிநீர்ப்பிரச்சினை,
நமக்குச் சாதகமாகப் புதுத் திருப்பம் அடைந்திருக்கும்
மாதமும் ஆகும் இது! மாண்புமிகு தமிழ்நாடு -
கர்நாடக முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தி
நல்லதோர் முடிவெடுத்துள்ளனர்.
தந்தை பெரியார், அறிஞர் அண்ணா
பிறந்த இந்த மாதம்,இவற்றாலும் மாபெரும் பெருமை
பெறுகிறது; நம்மனம் மகிழ்வால் நிறைகிறது!

பத்மவாசன்




தூய

பட்டு

தூய

சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி




தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

